

# தென்னகத் தலைவன்





ஆசிரியர்
**தினகரன்**



விலை
20
காசு

## கலைவாணர் சிறப்பிதழ்

# கலைவாணர் ஒரு தி.மு.க

**தமிழ்ப்பித்தன்**

தமிழ்த் திரையுலகில் சுயமரியாதை உணர்ச்சியைத் துணிந்து வெளியிட்ட முதல் தலைவர் கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் தான்! மூட நம்பிக்கையை முறியடிக்க அவர் ஆற்றிய தொண்டுகள் அதிகம்! அவர் நடித்த ஒவ்வொரு படத்திலும் புதுமைக் கருத்தை வெளியிடத் தவறியதில்லை! மக்கள் மனம் திருந்தாதிருக்கும் நிலையைச் சுட்டிக் காட்டி அவர்களின் அறியாமை நோய் நீங்கப் பாடுபட்ட அபூர்வ மருத்துவர் அவர்! மாற்றுக் கருத்து உடையவர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு தனது கருத்தை சீரிய முறையிலேசொல்லிவிடும் அசகாய சூரர் அவர், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல தனது கொள்கை முழக்கத்தை சீர்திருத்தநோக்கத்தைமக்கள் இதயத்திலே பதிய வைக்கும் பண்பாளர் அவர்!

படம் பார்க்க வருபவர்கள் பல்வேறு கொள்கையுடையவர்களாக இருப்பார்கள். அனைவரின் உள்ளமும் ஆனந்தம் அடைய வேண்டும். ஒரு சிலர் ஆனந்தப்படுவதும் வேறு சிலர் அவதிப்படுவதும் நியாயமானதல்ல. அதனால்தான்சீர்திருத்தக் கருத்தை நகைச்சுவையுடன் பின்னித் தருவார். அந்தக் கருத்தைக் கேட்கும் சீர்திருத்தக்காரர்கள் மகிழ்ந்து வரவேற்பார்கள்; மாற்றுக் கருத்து உள்ளவர்கள், அதை மறந்து, சிரித்து, ரசித்து விடுவார்கள். வாதி, பிரதிவாதி இருவரையும் சமமாகப் பாவிக்கும் நீதிபதியாக இருந்தார் அவர்.

எந்தக் கட்சியினர் அழைத்தாலும், அன்புடன் செல்வார் தனது கலைநிகழ்ச்சியைநடத்துவார். தனது சீர்திருத்தக் கொள்கையைத் தெளிவாகத் தெரிவித்துவிடுவார்.

தந்தை பெரியாரின் திறமையைப் பாராட்டி வந்தாலும்-அன்பர் ஜீவானந்தத்தின் மேல் அபார பிரியம் வைத்திருந்தாலும்-காமராசரின் ஆற்றலை அடிக்கடி புகழ்ந்துகொண்டிருந்தாலும் - சிவஞானத்தின் எல்லைப் போருக்கு இதய பூர்வமாக ஆதரவு தந்துகொண்டிருந்தாலும் அவரது உள்ளம் விரும்பியது அறிஞர் அண்ணாவைத்தான். அவர் உளம்பணி புரிந்தது திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான்!

அதனை அறியாதபேர்வழிகள் கலைவாணரைத் தங்கள் கட்சி என்று சொல்லிக் கொள்ளலாம் கலைவாணர் சர்வ கட்சித் தோழர்களிடம் தொடர்பு வைத்திருந்தாலும் உண்மையில் அவர் ஒரு தி.மு.கழகத்தவர் தான் என்பதை தெரிவித்திருக்கின்றன.

கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்தியபோது ம.பொ.சி. அவர்கள்வாணரைப்பாராட்டிப் பேசினார்கள் முன்னேற்றக் கழகத்தவர் என்று நம்பப்பட்டு வரும் கலைவாணரை முன்னேற்றக் கழகத்தவரல்ல என்று தொனிக்கும்படி பேசியது இங்கே நினைவுக்கு வருகிறது,

"கலைவாணர் வெள்ளை உள்ளம் படைத்தவர்! அவர் வெள்ளை! கருப்பு அல்ல!" என்று கருப்புச் சட்டைக்காரர்களுக்கு அவர் சொந்தமல்ல,—அதாவது முன்னேற்றக் கழகத்துக்குச் சொந்தமானவரல்ல என்ற பொருளில் பேசினார், கலைவாணர் அந்தப் பேச்சுக்கு பதலளிக்கவில்லை, உயர்ந்த உள்ளம் படைத்தவரல்லவா அந்த உத்தமர், அதனால்வாய்ப் பேச்சுப் பேசவில்லை! தனது நடவடிக்கைகளின் மூலமாக சிவஞானத்தின் சிந்தையைத் தெளிவு செய்யத் தொடங்கினார்.

*1957ம்* ஆண்டுப் பொதுத் தேர்தலிலே, கலைவாணர் தி. மு. கழக உறுப்பினர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். இந்த உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

காஞ்சித் தொகுதியிலே அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியிட்டபோது அவர்களை ஆதரித்துக் கலைவாணர் பேசியிருக்கிறார். அண்ணா அவர்களை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர் டாக்டர் சீனிவாசன் ஆவார். அண்ணாவை ஆதரித்து-அதாவது தி.மு.க.வை ஆதரித்து, —சீனிவாசனை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார் என்றால், கலைவாணர் ஒரு தி.மு.க. என்பது தானே பொருள்?

கவிஞர் கண்ணதாசன் முன்னேற்றக் கழகத்தில் இருந்த போது அவர் தேர்தலுக்கு திருக்கோஷ்டியூர் தொகுதிக்குச் சென்றுதீவிரப் பிரச்சாரம் செய்து வந்தார்.

கண்ணதாசனை எதிர்த்து காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிட்டன. அந்த இரண்டு கட்சிக் காரர்களையும் எதிர்த்து, நமது தி. மு. க. உறுப்பினரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார் என்றால் கலைவாணர் ஒரு தி. மு. க. என்றுதானே பொருள்?

அது மட்டுமல்ல. தோழர் சம்பத் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நின்று வெற்றி பெற்றபோது, அந்த வெற்றிச் சேதி கேள்விப்பட்டு, பொது மக்களுக்கு ஜிலேபி வழங்கி தமது சிந்தையைக் குளிரச் செய்து கொண்டாரே, கலைவாணர்! அது எதனால்! தான் ஒரு தி. மு. க, என்பதனால் தானே!

இதையெல்லாம் யோசித்துப் பார்க்காத அவசரப் பிறவிகள் கலைவாணரைத் தங்களது கட்சிச் சிமிழுக்குள் அடைக்க முயற்சி செய்தார்கள். அவர் ஓர் இலட்சியவாதி அல்லவா! கடைசிவரை அண்ணாவின் அன்பன் நான்; தி. மு. க.வின் தொண்டன் நான் என்பதை நிலைநாட்டிச் சென்றுவிட்டார் அந்த நடிக நாயகம்!

தான் ஒரு தி. மு. க. என்பதை அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். எப்போது! எங்கே என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்பார்கள்! அவர்களைக் கேட்டுக் கொள்வேன், தயவு செய்து, கலைவாணரின் 'பணம்' படத்தைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். அவர் பாடிய பாடல் ஒன்றை உற்றுக் கேளுங்கள் :

தீனா மூனா கானா—எங்கள்
தீனா மூனா கானா

அறிவினைப் பெருக்கிடும்
உறவினை வளர்த்திடும்
(தீனா)

பகுத்தறிவோடு நாட்டினர்
வாழ
திருக்குறள் தந்தார் பெரியார்-
வள்ளுவப் பெரியார்—
அந்தப்
பாதையில் நாடு சென்றிடவே
வழி
வகுப்பதும் அதன்படி
நடப்பதும்—எங்கள்
(தீனா)

கருப்பு சிவப்பு என்ற
பேதத்தை நீக்கும்—தலை
கனத்தைக் குறைத்து
நல்ல தன்மையுண்டாக்கும்
கள்ளர் மறவரொடு
பள்ளுப் பறைகளென
உள்ள பேதங்களை ஒழித்துக்
காட்டும் எங்கள்
(தீனா)

காந்தியடிகளின் அகிம்சையும்
வள்ளுவன்
கருணையும் ஒன்றெனக்
கொள்ளுவதும்—எங்கள்
(தீனா)

தனயன் மாருக்கொரு
தந்தையைப் போலே
தங்கை களுக்கொரு
தமக்கையைப் போலே
தம்பிமாருக் கொரு
அண்ணா போலே
சரியும் தவறும் இதுவெனக்
காட்டும்
தமிழன் பெருமை
தனை நிலை நாட்டும் (தீனா)


எங்கள் தீ. மூ. கா...

(3-ம் பக்கம் பார்க்க)

## எவரையும் மன்னிக்க இவரால்தான் முடியும்!



அளவுக்கு மீறிய கொடைக்குணம் என். எஸ். கே.யிடம் இருந்ததால் அவர் அநேகரிடம் ஏமாளி என்ற பட்டத்தையும் வாங்க வேண்டி வந்தது. இங்கிதம் தெரியாத ஒருவர் கலைவாணரிடம் வருஷத்துக் கொருமுறை வந்து என் குழந்தை செத்துப் போனது என்று நூறு ரூபாய் வாங்கிச் செல்வார். இப்படியே நாலைந்து வருஷமாக நடந்தது. இவரும் கொடுத்துக்கொண்டே இருந்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். பொறுமைக்கும் ஒரு எல்லை வந்தது. ஆறாவது தடவையாக அவர் இவரைப் பார்க்க வந்தார். வந்தவர் வாசலில் செருப்பைக் கழட்டிவிட்டு பாயில் வந்து உட்காருவதற்குள்ளேயே நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் கொடுத்து "சீக்கிரம் போயி குழந்தையை டாக்டரிடம் கொண்டு காட்டி குழந்தையைச் சாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். என். எஸ். கே. ஏமாளியல்ல, எல்லாம் அவருக்குத் தெரியும். எனினும் ஏனோ இப்படியிருக்கிறார், என்பது அன்றுதான் புரிந்தது. இன்னொருவராயிருந்தால் வருடக் கணக்காக ஏமாற்றிப் பணம் வாங்கியதற்காக உதைத்திருப்பார். இவரோ அந்தக் கயவனையும் சிரிக்க வைத்துத் திருத்திவிட்டார். இந்த நிலையிலும் சிரிக்கிறது. சிரிக்க வைக்கிறது என்றால் அது நிச்சயமாக ஒரு நகைச்சுவைப் பிறவியால்தான் முடியும்.




மலர் 1 | 29-9-63 | இதழ் 40

# இதயத்தில் ஏற்றி வைப்போம்!

தமிழ்நாட்டிற்குப் பலவாற்றாலும் மங்காத பெருமை என்றென்றும் உண்டு.

உள்ளும் புறமும் உடைத்த பெருஞ் செல்வம். அகமும் புறமும் அளித்திருக்கும் பேரின்பம். நீதிக்குத் திருக்குறளும்-நேர்மைக்குப் பாண்டியனும்-வாரி வழங்குதற்கு வழி திறந்து போட்டு வைத்த பாரி வள்ளல் எனும் பறம்புமலை மன்னவனும் நாட்டுச் சுதந்திரத்தைக் கேட்டுப் பெறுமுன்னே-பாட்டெழுதிப் பூரித்த பாரதிக் கவிமகனும்-பெண்ணடிமை-மண்ணடிமை-பேசும் மொழியடிமை இன்னும் இருக்கின்ற எல்லா அடிமைகளும் இல்லாதொழித்துவிட தீரமாய்ப் பாடுபட்ட திரு. வி. க. பெருந்தகையும்—தமிழ் மண்ணில் பிறந்ததினால்; இந்த மண்ணுக்கோர் பெருமையுண்டு. மாமலைக்கோர் சிறப்புண்டு.

விரிந்து பரந்து வளரும் தமிழகத்தின் பெருமைக்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் பங்கும் உண்டு.

கலைவாணரால் திரையுலகிற்கும் நடிகர்களுக்கும் ஒரு கௌரவம் ஏற்பட்டது. நடிகர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்று தூரத்தில் ஒதுங்கியிருந்த மக்களை நடிகர்களோடு தொடர்பு கொள்ளச் செய்தார். அதேபோன்று மக்களுக்கும் நமக்கும் வெகுதூரம் என்று உயரத்தில் உலாத்திக்கொண்டிருந்த நடிகர்களை மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்தார்.

திரையுலகில் நீண்டகாலமாக சீர்திருத்தப் பிரச்சாரம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்—ஆனால் பிரச்சாரம் பயன் தந்தது-மக்கள் சிரித்துக்கொண்டே சிந்திக்க ஆரம்பித்தார்கள்—என்ற நிலைமை என். எஸ். கே.யின் நுழைவுக்குப் பிறகுதான் ஏற்பட்டது.

உலகில் சிறந்த நகைச்சுவை நடிகர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் கலையுலக அந்தஸ்துகளோடு முற்றுப்புள்ளி விழுந்துவிடுகிறது. கலையுலகம் அவர்களை மெல்லக் கைவிடுகிறபொழுது மக்கள் அவர்களை வெகு சீக்கிரம் மறந்துவிடுகிறார்கள். அரசியல் தலைவர்களைப்போல் விஞ்ஞானிகளைப்போல், எழுத்துலக வேந்தர்களைப்போல், தத்துவ மேதைகளைப்போல்! இறவாப் புகழ்கொண்ட ஒரே நடிகர் உலகத்திலேயே என். எஸ். கிருஷ்ணன்தான். வேறு எவரேனும் இருப்பார்களேயானால் அதில் கலைவாணருக்குத்தான் முதலிடம்.

காரணம் அவர் ஒரு சினிமா நடிகர் மட்டுமல்ல-அவரே சொன்னதுபோல் அவர் ஓர் சீர்திருத்தக் கோமாளி! நாட்டுக்குச் சேவை செய்ய வந்த நாகரிகக் கோமாளி! நாடகமேடையிலே இவர் செய்யும் கோமாளித் தனங்கள்—நாட்டிலே நடைபெறும் கோமாளித்தனங்களுக்கு மருந்தாக அமையும்.

திரையில், நாடக மேடையில், வில்லுப்பாட்டில்—இவைகளின்மூலம் ஜாதி ஒழிப்புப் பிரச்சாரத்தைத் தீவிரமாகச் செய்தவர்-மூட நம்பிக்கை என்னும் தீராத வியாதிக்கு நகைச்சுவை மூலம் அருமையான மூலிகை கொடுத்தவர்-ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தை நீக்க நாடு முழுவதும் நல்ல தம்பியாய்ப் பவனி வந்தவர்-சர்க்கார் செய்யத் தவறிய மதுவிலக்குப் பிரச்சாரத்தை உருவாக்கி ஊரூராய் நடமாடவிட்ட ஒப்பற்ற பகுத்தறிவுச் செம்மல் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

கலைவாணரைக் காலம் மறக்கவில்லையென்றால்-மக்கள் அவரைத் தங்கள் மன அரங்கில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்றால் அவர் செய்த கருத்துப் பிரச்சாரம் மட்டும் காரணம் அல்ல!

வந்ததையெல்லாம் வறியவர்களுக்கு வாரி வாரி வழங்கினார். மருத்துவ மனைக்கு, பள்ளி நிதிக்கு. ஏழைகள் குடில் வசதிக்கு நாடகமாடி நன்கொடை யளித்தார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைவாணரின் பாட்டு காதுகளிலே ஒலிக்கிறதல்லவா? இப்போது என்ன சொல்வார்கள் மாற்றுக் கட்சிக்காரர்கள்!

சென்ஸார் போர்டின் தொல்லைக்காக திருக்குறள் முன்னணிக் கழகம் என்று அவர் விளக்கம் கொடுத்தார். ஆனால் அவர் தனது இதயத்திலே நினைத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான்!

அதே பாட்டில், **'தம்பிமாருக்கொரு அண்ணா போலே'** என்றும் வரும் இடத்தில் சற்று அழுத்தமாக உணர்ச்சிகரமாகப் பாடுகிறார். அதன் பொருள் என்ன? தம்பிமார்களின் இதயதீபமான அண்ணா அவர்கள் தனக்கும் இதயதீபமாகத்தான் விளங்குகிறார் என்பதை அவர் எவ்வளவு தெளிவாக எடுத்துரைத்துவிட்டார்!

அதே படத்தில், தி. மு. கழகத்தின் முதலாவது மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளைப் படம் பிடித்து, அந்தக் காட்சியைக் கதையிலே சம்பந்தப்படுத்தி, நாடெல்லாம் பவனிவரச் செய்தாரே அதன் பொருள் என்ன? அவர் ஒரு தி. மு. க. என்பது தானே!

திரை உலகத்தோடு நின்றாரா? வானொலி நிலையத்திலும் தனது கருத்தை முத்திரையிட்ட கர்மவீரர் அவர்!

ஒரு தமிழ்ப் புத்தாண்டு அன்று, வானொலியில் கலைவாணரின் நிகழ்ச்சி ஏற்பாடாகி இருந்தது. நிகழ்ச்சியில் பங்கு கொள்பவர்கள் தங்களது நிகழ்ச்சியின் வசனங்களை முதலில் நிலையத்தாருக்கு அனுப்பி ஒப்புதல் பெறவேண்டும் என்பது நிலையத்தின் விதி. கலைவாணருக்கு மட்டும் அந்த விதிக்கு விலக்கு இருந்தது. காரணம், அவரது எழுத்துக்கள் தீமையை ஒருபோதும் அணுகாதவை ஆயிற்றே!

நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சில நிமிடங்கள் இருக்கும். கலைவாணரின் கையிலிருக்கும் தாளை தற்செயலாக அதிகாரி பார்க்க நேரிட்டது. அதிலே உள்ள ஒரு விஷயம் அவர் கண்ணை உறுத்தியது. அவரது இதயத்தை வருத்தியது—அவருக்கு வேம்பைப் போல் கசந்தது. விஷயம் இதுதான்.

"இந்தப் புது வருஷத்திலே எல்லோரும் சந்தோஷமா இருக்காங்க, நம்ம பண்டித நேரு சந்தோஷமா இருக்காரு! காமராசரு சந்தோஷமா இருக்காரு! பெரியாரு சந்தோஷமா இருக்காரு! **அண்ணா சந்தோஷமா இருக்காரு**"—இவ்வாறு எழுதியிருந்தார் கலைவாணர் அவர்கள்.

இதைப் படித்த அதிகாரி, "'அண்ணா சந்தோஷமா இருக்காரு' என்பதைக் கண்டிப்பாக எடுத்துவிட வேண்டும்!" என்றார்.

"அதுலே என்ன தப்பு!" என்றார் கலைவாணர்.

"இல்லே எடுக்கத்தான் வேணும்"—அதிகாரி.

"வேணுமின்னா இப்பவே அண்ணா வீட்டுக்குப் போன் பண்ணுங்க. அவர் சந்தோஷமா இருக்காரா, இல்லையான்னு கேளுங்க! அவரு சந்தோஷமா இல்லாமெ ஜுரத்திலே இருந்தாருன்னா, இப்பவே அண்ணா சந்தோஷமா இருக்காரு'ங்கிறதை எடுத்துடுறேன்!" என்று நகைச்சுவையுடன் கண்டிப்பைக் கலந்து தனது இலட்சிய நோக்கத்தை வெளியிட்டார். நிர்வாகி, மீண்டும் தான் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார். அவ்வளவுதான் நிகழ்ச்சியே தேவை இல்லை என்று புறப்பட்டு விட்டார் கலைவாணர், நிர்வாகிகள் அவரைப் பின் தொடர்ந்தனர். கலைவாணரின் விருப்பத்திற்கு இணங்கினர். "அண்ணா சந்தோஷமாக இருக்கிறார்" ஒப்புக்கொள்ளப்பட்டது.

அண்ணாவின் மேல் அமோக அன்பும் தி. மு. கழகத்தின் மேல் நிரந்தரமான பாசமும் கொண்டிருந்த கலைவாணர் ஒரு தி. மு. க. என்பதில் ஐயமில்லை!

---

தமிழ்நாட்டில் அவர் பெயர் சொல்லப்பல இடங்கள்உண்டு.
அவரால் உயர்ந்த ஸ்தாபனங்கள் பல!
அவரால் உயர் நிலைக்கு வந்தோர் நூற்றுக்கணக்கில்!
அவரால் உருவாக்கப்பட்ட கலைஞர்கள் பலர்!

அவர் வெறும் நடிகர் மட்டுமல்ல சிறந்த அரசியல்வாதி! எந்தப் பிரச்சினைக்கும் சரியான விளக்கம் தருவார்.

அவர் கலைவாணர் மட்டுமல்ல மனிதருள் மாணிக்கம்!

வெறும் பிரச்சாரத்தால் மட்டும் ஏழைகளின் வாழ்வு உயர்ந்து விடாது-வசதி படைத்தவர்கள் வாரி வழங்க வேண்டும். பசி, பட்டினி, வறுமை என்று யாரும் அழுது கொண்டிருக்கக்கூடாது. எல்லோரும், எப்பொழுதும் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். இது கலைவாணர் கொள்கை! இதை அவர் முடிந்தவரை நிறைவேற்றினார்! முழுமையாக்கிக் காட்டினார்! அவரால் முடியாதபோது இருந்ததை வழங்கி இதய நிறைவு பெற்றார்;

ஆண்டுதோறும் அவரை நினைப்போம்.

நாம் எதுசெய்தாலும்-அவர் வள்ளல் தன்மைக்கு அது ஈடாகாது.

அவரைப்போல் இனி ஒருவரைக் காண்பது அரிது.

அறிஞர்அண்ணா சொன்னது போல் கலைவாணர் ஒரு சகாப்தம்.

# கலைவாணர் ஒரு சகாப்தம்

## சுப்பு ஆறுமுகம்

சுப்பு ஆறுமுகம் என். எஸ். கிருஷ்ணன் மறையும் வரை அருகிருந்தவர் — அவரிடம் பணிபுரிந்தவர், பங்கு பெற்றவர் என்பதுமட்டுமல்ல — கலைவாணரின் ஒவ்வொரு அசைவுகளையும் உடனிருந்தேரசித்து, தெரிந்து, தெளிவு பெற்றவர். கலைவாணரைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள இவர் எழுத்துக்கள் மெத்த உதவும்.

பேசப் பேச வளர்ந்து கொண்டேயிருக்கக்கூடிய பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட தமிழ் மொழியை நிகர்த்தவர் கலைவாணர். ஒரு பெருமையை எடுத்துக் கூற நினைத்தால் அதிலிருந்து பற்பல பெருமைகள் கிளைத்துக் கொண்டே இருக்கும் தன்மை, தமிழுக்கு அடுத்தாற் போல் கலைவாணர் ஒருவருக்குத்தான் உண்டு என்பதுஎனது கருத்து.

இந்த நாட்டில், தந்தையின் குணத்தை அறியாத நபர்கள் இருக்கலாம்; அண்ணணின் குணம் அறியாத தம்பியர் இருக்கலாம்; அன்னையின் குணமறியாத பிள்ளைகள் இருக்கலாம்; தலைவனின் குணம் உணராத தொண்டர்களும் கூட இருக்கலாம்; ஆனால் இந்த வரிசையில் உள்ளவர்கள் கூட, கலைவாணரின் குணத்தை உள்ளது உள்ளபடியே அறிந்து வைத்துப் பேசுகிறார்கள். கலைவாணர், இருந்ததை அள்ளி அள்ளிக் கொடுத்துவிட்டு, இறுதியில் ஏழ்மையில் வாடியவர் என்பது அனைவர்க்கும் தெரியும்.

சிரிக்க வைப்பதில், சிந்தனையைத் தூண்டுவதில் அவருக்கு நிகர் அவரே என்பதும் எல்லோருக்கும் தெரியும். அவர் எல்லோருக்கும் நல்லவர்; நல்லார்க்கோ மிகவும் நல்லவர்; எல்லாக் க்ட்சிகளுக்கும் உரியவர் எல்லாக் கட்சிகளுக்கும் எல்லாம் தந்திருக்கிறார்; திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும், தம்மையே தந்திருக்கிறார் என்ற இலைமறை காய் உண்மையும் ஏறத்தாழ இந் நாட்டவர்க்குப் புரியும். அவர் நல்ல உள்ளம் வாய்ந்தவர் என்பதை தீய உள்ளம் கொண்டவர்கள்கூட மறுப்பதில்லை! கலைவாணரின் இத்தனை பெருமைகளையும் கடந்து நிற்கும் இன்னொரு பெருமையை இப்பொழுது கூற விரும்புகிறேன். இந்தப் பெருமை, இன்றுள்ள கலைப் பெருமக்களுக்கிடையே மிகவும் அபூர்வமாகத்தான் காணப்படுகிறது என்பதையும் முதலில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது நாட்டில் எந்தத் துறையில் முன்னேறிய பெரியவர்களிடமும் முழுமையான பெருமை இருப்பது அரிது; ஏதோ ஒரு வகையில் அவர்களிடம் ஒரு மர்மம் இருந்து கொண்டேதான் இருக்கும். மர்மம் அதிக அளவில் இருப்பவர்கள் அதிக அளவில் முன்னேறி விட்டதாகவும் கருதப்படுவது உண்டு.

இப்படியெல்லாம் பெரியவர்களாக இருந்தவர்கள்பெரிய அளவில்வாழ்ந்துவந்தநாட்டில்தான் கலைவாணர் அவர்களும் அந்த வரிசைக்கே பெருமை தரும் விதத்தில் வாழ்ந்தார். ஒவ்வொரு பெரியவர்களிடமும் ஒவ்வொரு விதமான குறையிருக்கும்;ஆனால்ஒரேஒரு குறைபாடு மட்டும் எல்லோரிடமும் ஒன்று போலிருக்கும். அது என்னவென்றால், தங்களைவிட தாழ்ந்தவர்களை நடத்துவதில் எல்லாப் பெரியவர்களும் ஒரே விதமான பாதகத்தையே செய்து வருவார்கள்!

ஒரு பெரிய கவிஞன் ஏன் என்றால், அவன் பெரும்பாலும் தன்னிலும் வளர்ந்தவர்களை நோக்கி வியந்தவனாக வாழ வேண்டும்; இந்த நாட்டைப் பொருத்த வரையில் அப்படி அமைவதில்லை. இளங் கவிஞர்களைக் கிண்டல் பண்ணுவது, பரிகசிப்பது, அவர்களிடம் உள்ள குறைகளை விதவிதமாக வருணிப்பது இவைகளில்தான் பெருங் கவிஞர்கள் தங்கள் பெரிய புத்தியைச்செலவழித்து கொண்டிருப்பதுண்டு!

பெரிய நடிகர் ஒருவர் எதில் அதிக மகிழ்ச்சி யடைந்து வருகிறார் என்பதை நெருங்கி நின்று நிதானமாகக் கவனித்தால் தன்னைவிட பெரியவர் ஆக அதிசயிப்பதில் அவர் பெறும் இன்பத்தைவிட, தன் அளவுக்கு வரமுடியாது தவித்துக் கொண்டிருக்கும் இளம் நடிகர்களை அல்லது போதிய திறமையற்ற நடிகர்களைக்கேலி செய்வதில் தான் (ஆன்ம) திருப்தி கொண்டிருப்பார்?

பெரியஎழுத்தாளர்களைஎடுத்துக் கொள்வோம். இலக்கியம் கெட்டுப் போயவிட்டது, யரர் யாரோ வந்து ஏதேதோ செய்யும் நிலை வந்துவிட்டதே,காலம் மாறிப்போய்விட்டதே. அற்புதமாக எழுதும் நாங்கள் இலக்கிய உலகில் நேற்று முளைத்த காளான்களுக்கு அஞ்சவேண்டியதாகிவிட்டதே என்று கவலைப்பட்டவாறுதான் இருமிக் கொண்டிருப்பார்கள்!

அதாவது, வளர்ந்துவிட்டவர்கள் வளராதவர்களைநோக்கி வளர போதிய வாய்ப்பும் திறனும் இல்லாது முயன்றுகொண்டிருப்பவர்களை நோக்கி-எள்ளி நகைப்பது ஏதேதோசொல்லிப் பகைப்பது என்ற சூழ்நிலை, அன்று அவர் வாழ்ந்த காலத்தில் மிகமிகஅதிகம்! அப்போது கலைவாணர் மட்டும், மற்றவர்களின் பலவீனங்களைப்பற்றி ஒரே ஒரு பரிகாச வார்த்தை கூட சொல்லமாட்டார். அடுத்தவர்களின் பலவீனத்தை வருணிப்பதில் தனது பலத்தை அவர் ஒருபோதும் ஒரு சந்தர்ப்பத்தில்கூட செலவழித்ததில்லை!

நேற்று மாலை எழுத ஆரம்பித்து இன்று காலையில் கலைவாணரைச் சந்திக்க வந்த ஓர் எழுத்தாளனைக்கூட கலைவாணர் பரிகசிக்கமாட்டார்; உன் மாதிரி ஆட்களால்தான் எழுத்துலகமே கெட்டுப் போய்விட்டது என்ற தினுசில் எல்லாம் பேசமாட்டார். “தம்பி! பெர்னாட் ஷாகூட நேற்று நீ எழுத ஆரம்பித்ததைபோல், ஏதாவது நேற்றைப்போன்ற ஒரு நாளில்தான் எழுத ஆரம்பித்திருப்பார். உழைப்பில் சிந்தனையில் நம்பிக்கை வைத்தார். உயர்ந்தார். அப்படியே நீ வர வேண்டும்” என்ற பாணியில் தான் வாழ்த்துவார்!

ஓர் இளம் நடிகர் நடிக்கும் போது வசனத்தை உளறினால் அல்லது கைகால்கள் பதறினால் உடனே கலைவாணர் அவரைப் புண்படுத்தி நகைச்சுவை பேசுவது கிடையாது. “தம்பி! இப்ப நீ உளறுகிறாயே உனக்குக் கையும் காலும் ஆடுதே, அதே மாதிரிதான் எனக்கும் முதன் முதல் நாடகத்திலே ஆடிச்சு” என்று சொல்லி அவனை உற்சாகப்படுத்தின்தான் நடிப்புச் சொல்லிக் கொடுப்பார்!

எத்தனையோ இளம் கவிஞர்கள் கலைவாணரைப் பார்க்க வருவார்கள். அவர்கள் கவிதையை மாபெரும் இலக்கியத்தை ரசிப்பது போல ரசிப்பார். ‘ஏனுங்க அதைப்போய் இப்படி

(10-ம் பக்கம் பார்க்க)



## தலைவர்களைப்பற்றி கலைவாணர்!

**பெரியார்**

தூங்காமை கல்வி துணிவுடமை என்ற
நீங்காக் குணங்கள் படைத்த
ஆங்காரமான அறிவுத் தந்தை
பெரியார் பிறந்த நாடு!

○

**அறிஞர் அண்ணா**

தன்மானத்தைத் தழைக்கச் செய்யும்
தகைமை மிகவும் கொண்ட
தமிழ் இனத்துக்கே ஒரு கண்ணான நம்ம
அண்ணா பிறந்த நாடு!

○

**ஜீவானந்தம்**

நம்நாட்டின் ஜீவனும் ஆனந்தமும் இவர் ஒருவரிடம்தான் அடங்கி அமைந்திருக்கின்றன. இதை என். எஸ். கிருஷ்ணன்-நான் புரிந்தால்மட்டும் போதாது. எல்லோரும் புரியவேணும்!

○

**ராஜாஜி**

நம்ம தென்னாட்டுக்கே பெருமைதந்த அறிவாளிகளிலே ராஜாஜி ரொம்பவும் முக்கியமான ஆள். அவரு இங்கே பிறந்திருக்காவிட்டால், ஏதோ ஒன்றை—அது என்னதுன்னு சொல்லமாட்டேன்-நாம நிச்சயம் இழந்திருப்போம்! அடுத்த நூற்றாண்டிலே பிறக்கவேண்டிய மனுசன்; முந்திப் பிறந்திட்டாரு! நாமளும் முந்தியே வாழ்த்திடுவோம்!

- **கலைவாணர் என் கணவர்**
- **கலைவாணர் என் தெய்வம்**
- **கலைவாணர் ஒரு குழந்தை**
- **கலைவாணர் ஒரு வள்ளல்**

**அவருக்குப் பின்-**



# நான் இசையிழந்த நாதம்

**என். எஸ். கே. மதுரம்**

என் கணவர் கலைவாணர் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர் எனக்கு மட்டும் சொந்தமானவராக இல்லாமல் நாட்டிற்கெல்லாம் சொந்தமாக வாழ்ந்தார். அவருடைய நடிப்புத் திறமை, வள்ளல் தன்மை என்ன என்பதையும் நாடறியும். விளம்பரம் எதுவும் செய்து கொள்ளாமலேயே அவர் செய்த உதவிகள் கணக்கில் அடங்காது. அவருடைய சிறந்த குணங்களுக்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

யாராவது கஷ்டம் என்று வந்து முறையிட்டால் சட்டையின் இடது பக்கம் அமைந்திருக்கும் பையிலிருந்து பார்க்காமலேயே இடது கையால் ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்துவிடுவார். கையில் எடுத்த பணம் எவ்வளவு? என்றுகூட பார்க்காமலேயே கொடுத்துவிடுவார்.

“ஏனய்யா கொடுப்பதே கொடுக்கிறீர், அதை வலது கையால் கொடுக்கக் கூடாதோ?” என்று ஒருநாள் கேட்டு வைத்தேன். அதற்கு சிரித்துக்கொண்டே அவர் அளித்த பதில் இதுதான்.

“இந்தா பாரு! இடது பக்கம் இருக்கிற பையிலிருந்து இடது கையாலே எடுத்துக் கொடுத்தால் எவ்வளவு பணம் என்று கண்ணுக்குத் தெரியாது. வலது கையால் எடுத்து முகத்துப் பக்கத்தைக் கடந்து அந்தக் கையைக்கொண்டு வரும்போது கண் அதைப் பார்த்துவிட்டால் பொல்லாத மனக் குரங்கு, ஐயோ! இவ்வளவு பணத்தையா கொடுக்கிறோம்! என்று எண்ணிவிடக் கூடாதே, புத்தி மாறிவிடக் கூடாதே என்பதற்காக இடது கையால் எடுத்து அப்படியே நீட்டிவிடுகிறேன்”

அப்படிப்பட்ட புதுமையான மனிதர் அவர்.

நாங்கள் இரவில் இரண்டாவது மாடியில் படுத்திருப்பது வழக்கம். மின்னல், இடி என்றால் எனக்கு ஒரே பயம்! இரவில் தூங்கும்போது மழை, மின்னல், இடி இவைகள் தோன்றினால் கலைவாணரை எழுப்பி “ஐயோ பயம்மாயிருக்கு. கீழே போயிடலாம்” என்று சொல்வேன். ஆனால் அவர் மறுத்துவிடுவார். எவ்வளவு தொந்தரவு செய்தாலும் கேட்கமாட்டார். போகவும் அனுமதிக்கமாட்டார்.

“நீ மாடி வீட்டில் வசதியோடு படுத்திட்டே. மின்னல் இடின்னு பயப்படுறீயே. இப்பவே என்னோட வா. எந்த வசதியும் இல்லாம பிளாட்பாரத்தில் மின்னல், மழை இவைகளுக்கு மத்தியிலே இருக்கிற ஜனங்களை காட்டுகிறேன்” என்று கிளம்பச் சொல்லுவார். இதற்காக நான் பேசாமல் படுத்துக்கொள்வேன்.

நானாக கேட்டால் அவர் ஒத்துக்கொள்ளவே மாட்டார். ஆனால் சில தினங்களில் அவராகவே எழுந்து “அம்மா உனக்குப் பிடிக்காதது வந்துவிட்டது (இடி, மின்னல்) வா கீழே போய் படுத்துக்கொள்ளலாம்” என்று அழைத்துச் செல்வார்.

அவர் ஏராளமான அளவில் பலதரப்பட்ட வகையில் உதவி செய்திருக்கிறார். குறிப்பாக பள்ளிக்கூடங்கள் நிதிக்கு அவர் செய்த உதவி மிக அதிகம். சிறுவயதில்—தான் படிக்க இயலவில்லையே, மற்ற குழந்தைகளாவது படிக்க உதவுவோம் என்பது அவரது எண்ணம்.

தன் மனதிற்கு சரி என்று படுவதை அவர் செய்து முடிப்பார். ஒருவர் சொல்வதை வைத்துக்கொண்டு செயல்படமாட்டார். அவர் மனைவி—உடன் நடிக்கும் நடிகை என்ற முறையில் நான் ஏதாவது சொன்னாலும் கேட்பதைத்தான் கேட்பார். இல்லை என்றால் நீ சொல்வது தவறு என்று உடனே சொல்லிவிடுவார். அவருடைய வழிக்கு விரோதமாக நான் இன்றும் நடந்துகொள்ள முடியாததால் மனக் கஷ்டத்தோடு வாழ்ந்து வருகிறேன்.

மற்ற நடிகர்கள் நன்றாக நடிப்பதைப் பார்த்து நம் நண்பர்கள் இவ்வளவு நன்றாக நடிக்கிறார்களே என்று மகிழ்ச்சியும் பூரிப்பும் அடையும் பெருங்குணம் அவரிடமிருந்தது.

சர்வகட்சியும் அவர் கட்சிதான் எல்லோருடனும் பழகுவார் கோயில் திருப்பணிக்கும் பணம் கொடுப்பார்.

எல்லா வாத்தியங்களும் வாசிப்பார், எல்லா விளையாட்டுகளிலும் பங்கேற்பார்.

இயற்கையை ரசிப்பதில் அவருக்கு இணை அவர்தான். காரில் செல்லும்போது ஏதாவது இயற்கை அழகுள்ள இடங்கள் இருந்தால் இறங்கி அங்கே சென்று அமர்ந்துகொண்டு ஏதாவது எழுத ஆரம்பித்துவிடுவார். குளங்கள் ஆறுகளைக் கண்டால் மணிக்கணக்கில் நீந்தி விளையாடுவார். சில சமயம் நல்ல மழை பெய்யும்போது வா மழையில் கொஞ்சம் நடக்கலாம் என்பார், என்னய்யா மழையில் நனைவதா? என்றால் “மழை நாம் விரும்பும்போது வா என்றால் வருமா? போ என்றால் போகுமா? ஆகவே அது வரும்போது கொஞ்சம் அனுபவிக்கலாம்” என்று கையை பிடித்துக் கொட்டும் மழையில் அழைத்துச் செல்வார். மழையிலே ஜோடியாக நனைவதையும் அவர் ஒரு கலை உள்ளத்தோடு ரசிப்பார். உலக இன்பங்கள் எல்லாம் அனுபவித்தவர் அவர். துன்பங்கள் வந்தபோதும் அது பற்றிக் கவலையே கொள்ளமாட்டார்.

அவர் மறைந்தபின் என்ன வாழ்க்கை? அவருக்கு முன்பே நான் இறந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. உலகுக்கு உதவிய உத்தமருடன் நீண்டநாள் வாழக் கொடுத்துவைத்தவள் என்ற திருப்தி இருந்தாலும் தற்போது என் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறமுடியவில்லை. ஏதோ கலைவாணரின் நினைவோடு நாட்கள் சென்று கொண்டிருக்கின்றன, அவ்வளவுதான்!



## வெள்ளிக்கிழமை !

கலைவாணர் வாழ்ந்த காலத்தில் இந்திய அரசியலார்க்கு வேண்டுகோள் விடுக்கும் வகையில் ஒரு கருத்தை வெளியிட்டார்.

“இயேசு அவர்கள் வெள்ளிக்கிழமைதான் இறந்தார்கள். உலக உத்தமர் காந்தியார் அவர்களும் வெள்ளிக்கிழமைதான் இறந்தார்கள். அமெரிக்க நாட்டுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கனும் வெள்ளிக்கிழமைதான் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆகவே நமது சர்க்கார், இப்போது நடைமுறையில் இருந்து வரும் சர்க்கார் விடுமுறை நாளை ஞாயிற்றுக்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமைக்கு மாற்றவேண்டும்” என்பதே நமது கலைவாணர் அவர்களின் வேண்டுகோள்.

இந்த நல்ல எண்ணத்தைத் தெரிவித்த அதே கலைவாணர் அவர்கள் இறந்தது வெள்ளிக்கிழமைதான் !

# சாகாத தலைவர் என்.எஸ்.கே

கலைஞர் மு.கருணாநிதி

நகைச்சுவை அரசர்

நல்ல தமிழ்க் கலைவாணர்

நாடு போற்றிய செம்மல்

கற்கண்டு நிகர் சொல்லாளர்

பொற்குன்றமெனும் பண்பாளர்

கலை மேதை

கருத்துச் சோலை

எங்கள் என். எஸ். கே. என நாவார மனமார நாடெல்லாம் நல்லவர் வீடெல்லாம் புகழப் பட்ட அந்த சீர்த்திருத்த வள்ளல் இன்று நம்மிடையே இல்லை. ஆண்டு பல ஓடி விட்டது. சுடு மணலிற் புழு வெனத் துடித்தோம். "தரு நிழலே—நிழல் தந்த சுகமே"-என யாரைப் பாராட்டிப் பண் இசைத்துக் களித்தோமோ அவர் காலமெனும் பெருஞ் சுழலில் மறைந்து போனார். பல ஆண்டு கழிந்தும் ஆறுதல் பெற வழியுண்டோ என அலைகிறோம். அலை மோதுகிறோம். நேற்றிருந்தார் இன்று பிரிந்தார் என்ற நிலைதான் காண்கிறோமேயன்றி ஆண்டு ஆறு நகர்ந்ததே புரியவில்லை. நம் குடும்பத்துப் பிரிவுகளைக் கூடத் தாங்கிக் கொள்ள முடிந்தது. நாடென்னும் பெறுங் குடும்பத்து நகைச் சுவை நாவலனை-கலையுலகக் காவலனை—இழந்த சோகம் ஒரு துளியும் குறையவில்லை. எங்கெங்கே சிரிப்பு ஒலி எழுகிறதோ அங்கெல்லாம் கலைவாணர் நினைவு வருகிறது. கண்கள் உடனே குளமாகின்றன. என் செய்வோம்!

தமிழகத்தில் எல்லாப் பணிகளிலும் முன் நின்றார். தன்னை மறப்பது போல் ஒரு பணியும் அவர் செய்யவில்லை. அதனாலன்றோ ஆற்றொனாத் துயரத்தாலே அவர் நின்ற திசையெல்லாம் நோக்கி நோக்கி விம்முகின்றோம்— விழிநீர் பெறுக்குகின்றோம். கலைத்தாய், தன் தலை மகனைப் பறி கொடுத்துப் புலம்புகின்றாள். கலைத்தோட்டம் நறுமண மலர்க்கொடியொன்றை இழந்து தன் பொலிவிழந்தது. கலையருவி தடைப் பட்டது. தமிழகத்தின் கண்ணீர் உடைப்பெடுத்தோடுகிறது. இந்த வேதனை நாம் கண் மூடும் வரை மாறாது—மறையாது! தீராது! தெளியாது!

என். எஸ். கே. நம்மிடம் இல்லை ஆனாலும் விஞ்ஞானம் தந்த வரத்தால் அவர் தமிழை—திரையில் காண்கிறோம், அவர் குரலைக் கேட்கிறோம், அவர்தம் ஆடலை, பாடலை அறிவு வளர்க்கும் நகைச்சுவை விருந்தைச் சுவைக்கிறோம்.

உருவு கண்டோம்—உளத் தேர்வு கொண்டோம்!

குரல் கேட்டோம்—குமுறும் நெஞ்சம் சிறிது—அடங்கிற்று!

இத்துடன் நிம்மதி பெறுவது தான் நாம் அவருக்குச் செய்யும் கடமையா?

"அல்ல! அல்ல!" என்கிறது நன்றியெனும் ஒரு பண்பு.

● அந்த உத்தமர் விட்டுச் சென்ற கலைத்துறைப் பணியில் உரமான எண்ணம் கொண்டு தொண்டு செய்வோம்.

● அவர் வளர்த்த அன்பை, மேலும் தழைக்கச் செய்வோம்.

● அவர் சொன்ன கருத்துக்களை ஊக்கமாகப் பரப்பிடுவோம் என்பவை மட்டுமல்ல;

கலைத்துறை நண்பர்கள் அனைவர்க்கும்! அவரே சாகாத தலைவர்.

கண்கண்ட தெய்வம்!

கலைக் கோயில்!

கருத்துக்கு வழிகாட்டி!

அவரது 'நினைவுச் சின்னம்' எங்கனும் திகழ்ந்திடல் வேண்டும்.

நடிகர் சங்கத்து முத்திரையா?

அதிலே கலைவாணர்!

நாடக மேடையின் முன் திரையா?

அதிலே கலைவாணர்!

திரைப்படத்தின் துவக்கமா?

அதிலும் கலைவாணர்!

அவர் இருந்தால் நம்மையெல்லாம் மறக்க மாட்டார்.

நாம் அவரை மறக்கமாட்டோம்—மறக்கக் கூடாது!



## திறந்த இதயம்! திறந்த பெட்டி!

சதி லீலாவதி படப் பிடிப்புக்காக, கலைவாணரும், மற்றும் பல நடிகர்களும், கல்கத்தா சென்று இருந்தார்கள். உடன் நடித்த ஒரு பிரபல நடிகர் தன் சம்பந்தப் பட்ட படப்பிடிப்பு முடிந்ததும் சொந்த ஊருக்குப் புறப்படத் தயாரானார். கலைவாணரிடம் தனது பயனத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்ட அவர் "வேண்டாம் ஐயா! இப்போ என்ன அவசரம்?" என்று அவரைக் கேட்டார். அவர் என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தார். அடுத்த கணம் அவரது நிலைமையைப் புரிந்து கொண்டார்.

"ஊருக்குப் பணம் வேண்டுமென்றால் அனுப்பி விடு! மெதுவாகப் போய்க் கொள்ளலாம்" என்றார். அதற்கும் என்ன பதில் சொல்வது என்று தவித்தார் நண்பர். "அனுப்பலாம்! ஆனால்..." என்று சொல்லி, வார்த்தைகளை விழுங்கினார். அவ்வளவு தான்-கலைவாணர் புரிந்து கொண்டார். அவருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே "அட கிறுக்கா இதை அப்போதே சொல்வதற்கு என்ன? போ! போ! என் பெட்டியில் ரூபாய் இருக்கிறது-எடுத்து எவ்வளவு அனுப்ப விரும்புகிறாயோ, அவ்வளவு அனுப்பு" என்று சொன்னார்.

உடனே நண்பர்—"ஆமா! பெட்டிச் சாவியைத் தரவில்லையே!" என்றார். கலைவாணர் மெதுவாக, "அட பைத்தியக்காரா! என் பெட்டிக்குப் பூட்டு ஏது? அது எப்போதும் திறந்த பெட்டி! போ! சீக்கிரம் பணத்தை எடுத்து ஊருக்கு அனுப்பு"-என்று சொன்னார்.

அதைக் கேட்ட அந்த நடிக நண்பருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

## இந்த எழவெடுத்த சர்காருக்கு என்னதான் தெரிகிறது?



பண்டித நேரு ஒரு புது வழியைக் கையாண்டு வருகிறார்.

தவறு செய்யும் அமைச்சர் பெருமான்களை ஆலிங்கனம் செய்து அவர்களுக்கு ஆதரவு தருவதும்-குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குறையற்றவர்கள் என்று வாதிடுவதும்-உண்மை வெடித்து - ஊழல் வெளிப்பட்டு குற்றவாளிகளின் செயல் முச்சந்திக்கு வருகிறபொழுது—"இவர் அப்படியா நடந்துகொண்டார் எனக்குத் தெரியாதே!" என்று கையை அகலமாக விரித்து விலகி ஓடுவதும் அவர் 'பாலிஸி'களில் ஒன்றாக இருந்து வருகிறது. இது எந்த உலகத்து ராஜதந்திரமோ நமக்குப் புரியவில்லை.

தங்கக் கட்டுப்பாடு திட்டம் கொண்டுவரப்பட்டது நேருவுக்குத் தெரியாதாம்.

அதேபோன்று கட்டாயச் சேமிப்புத் திட்டம் அவர் கண்ணிலே காட்டப்படவில்லையாம்.

அமெரிக்க ஒலிபரப்பு ரேடியோ ஒப்பந்தம் நடுநிலைமைக் கொள்கைக்கு விரோதமாகக் கையெழுத்தானது கூட அவருக்குத் தெரியவே தெரியாதாம்!

அரசுத்துறையினரால் வெளியிடப்பெறும் செய்திப் படத்தில் கம்யூனிஸ்டுகளின்-கோடிக் கையெழுத்து மகா விண்ணப்ப ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி இடம்பெற்றது, பண்டிதருக்கோ-உள்துறை அமைச்சருக்கோ-அந்த நிர்வாக அமைச்சருக்கோ சத்தியமாய்த் தெரியாதாம்!

மகாவீர் தியாகி குத்திக் கிளறியவுடன்தான் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியை வெட்டி எறிந்துவிடும்படி உத்தரவு பறக்கிறது!

நேருவுக்குத் தெரியாமல் இன்னும் என்னென்ன நடைபெறுகிறதோ? நாம் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கப் போகிறோமோ? முடி சூடா மன்னரைப் பெற்றெடுத்த அந்த மோதிலால் நேருவுக்கே வெளிச்சம்.

கலைவாணர் எழுதிய கட்டுரை



# நான்கண்ட ரஷ்யா

நான் என் வாழ்வில் எத்தனையோ காணுதற்கரிய இடங்களைக்கண்டிருக்கிறேன். நினைத்தற்கரிய இனிய நிகழ்ச்சிகளை அனுபவித்திருக்கிறேன். என்ருலும் சோவியத் ரஷ்யாவிற்குச் சென்றிருந்தபோது மகிழ்ந்ததைப் போல் எங்கும் என்றும் மகிழ்ந்ததே இல்லை. மகிழ்வின் எல்லையை அங்குதான் தரிசித்தேன். நான் மகிழ்ந்த நாள் என்று ஏதாவது ஒரு நாளை சுட்டிக் காட்டவேண்டுமானல், அந்த நாள் நான் சோவியத் திருமண்ணில் காலடி எடுத்த வைத்த நாளாகத்தான் இருக்க முடியும்!

சோவியத் ரஷ்யாவிலே, நான் கண்ட காட்சிகளை நினைக்க நினைக்க இப்பவும் மெய்சிலிர்க்கிறது! ரஷ்யாவை சுவர்க்க பூமி என்று சொல்லுவதைவிட சுவர்க்க பூமியை ரஷ்யா பூமி என்றுகூட இலக்கியமாகச் சொல்லலாம்; தவறில்லை.

மனிதனின் சக்திகளுக்கு எது எல்லை என்பதை அங்கு கண்டேன்; தாங்கள் வாழும் தாய்நாட்டை அங்குள்ள மக்கள் உண்மையிலேயே தாய் நாடுபோல் தங்கும் வீடுபோல கருதிக் கவனித்துக் கௌரவம் தருகிருர்கள், இங்குள்ள ஒரு சிலரைப் போல!

அங்கே மக்களுக்கும் சர்க்காருக்கும் இடையே அன்புதான் காணப்படுகிறது; தேவையற்ற சட்டங்களைக் காணேம்.

இந்தியாவில் உள்ள குடும்பங்களில் ஒரே ஒரு குடும்பத் தலைவனின் உழைப்பைக் கொண்டே, அந்தக் குடும்பங்கள் வாழவேண்டியதிருக்கிறது. அங்கே குழந்தைகள் தவிர, வேலை செய்ய இயலாதவர்கள் தவிர ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவரும் உழைக்கிருர்கள். வேலை செய்ய முடிந்தால், 80 வயதுக் கிழவியும் கிழவனும்கூட தொழிற்சாலைகளில் வேலை செய்து கொண்டிருக்கிருர்கள். இங்கே எப்போது 'பென்ஷன்' வாங்கிக் கொண்டு வீட்டிலிருந்தவாறே சத்—விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கலாம் என்று விரும்பும் சில பெரியவர்களையும் நான் கண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு பிள்ளைகளும் ஐந்தாவது பாரத்தில் தேர்ச்சி பெற்றதும் 'பயோனியர் பாலஸ்' என்ற ஒரு ஸ்தானத்தில் சேர்க்கப்படுகிருர்கள். கட்டாயமாக தினமும் இரண்டு மணி நேரம், விளையாட்டு மூலமாகவே அங்கே அரசியல் முதல் அனைத்தும் கற்பிக்கப் படுகின்றன. உலகம் சுற்றிய பயனை ஒரு மாணவன் இந்த ஸ்தானத்தின் மூலமாகவே அநேகமாகப் பெற்றுவிடக் கூடும்.

படத்துறை சம்பந்தமாக அங்கே இருக்கும் கட்டுப்பாடுகளை நினைக்கும்போதே, எங்களுக்குப் பெருமையாக இருந்தது. அவ்வளவு கௌரவம் கொடுத்திருக்கிருர்கள். அதில் சேர்ந்து முன்னுக்கு வரவிரும்பும் எவரும் :கட்டாயமாக ஐந்து வருடம் அதற்குரிய கல்விகளைக் கற்று, அதில் தேர்ச்சியும் பெற்ருக வேண்டும்; தேர்ச்சியிலும், முதல் இரண்டாம் மூன்ரும் வகுப்புகள் உண்டு. திறமைக்குத் தக்க மதிப்பு, தானுகவே ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டியபொழுதில் கிடைத்து விடும்!

நாட்டியக் கலைக்கோ ஒன்பது வருடப் படிப்புத் தேவை அதில் பாஸ் செய்தவர்கள்தான் மேடை ஏறி ஆட முடியும். இதிலும் முதல், இரண்டாம், மூன்ரும் வகுப்புகள் உண்டு; தகுதிக்கு ஏற்ற சிறப்புகளும் உண்டு.

சினிமாப் பள்ளியில் படித்துப் பாஸ் செய்தவர்களே ஒரு ஸ்டுடியோ நடத்திக்கொள்ளலாம். முழுக்க முழுக்க சர்க்காரின் உதவியில், 'கிளாப்' அடிப்பவன் முதல் பட டைரக்டர்கள் வரை சமத்துவமான முறையில் வளர்க்கப்படுவதால், அங்கே போட்டி பொருமைக்கு இடம் ஏற்படுவதே இல்லை!

நாடகத்துக்கு மூன்று ஆண்டு கட்டாயப் படிப்பு உண்டு. அதில் தேர்ச்சி பெற்றவர்களே, 'ஆப்பார' தியேட்டரில் ஆட முடியும். அவர்கள் பட உலகிற்கு வரவேண்டுமாயின், அதற்குரிய தகுதியும் தேவை; இங்குள்ளதுபோன்ற கலைக் குழப்பங்களை, அங்கே தேடித்திரிந்தாலும் காண முடியாது!

கலைஞர்களாயினும், மற்றவர்களாயினும் தங்களுக்குக் கிடைக்கும் பொருளை சேமித்து வைத்து தங்களுக்குப் பிரியமான வாழ்க்கைப் பொருளை வாங்கிக்கொள்ள உரிமை உண்டு. இங்கு வசதியுள்ளவர்கள் வசதிக்கு அடையாளமாக கையில் 'செக்' புத்தகத்தை

(8-ம் பக்கம் பார்க்க)

## செய்திக் கதிர்

### வாழ்க! வளர்க!



சென்னையில் வன விலங்கு வாரத்தை முன்னிட்டு இன்று மாலையில் யானை, புலி, சிங்கம் ஆகிய காட்டு மிருகங்களின் ஊர்வலம் நடக்கிறது. இந்தியா முழுவதிலும் வருடா வருடம் வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுவது தெரிந்ததே! இந்த வருடமும் வன விலங்கு வாரம் கொண்டாடப்படுகிறது. வனவிலங்கு வாரம் இந்தியா முழுவதிலும் இன்று ஆரம்பம் ஆகிறது. தொடர்ந்து ஒரு வாரம்வரை நடக்கும்.

இந்த வாரத்தை முன்னிட்டு மந்திரி மன்ருடியார் ரேடியோவில் பேசினுர். காடுகளையும் காட்டு மிருகங்களையும் பாதுகாப்பதுபற்றிப் பேசினுர்.

—'மாலைமுரசு'
1-10-63.



பக்தவத்சலம் 66-வது பிறந்த தினம், திருவல்லிக்கேணி ஜன நாயக சேவா சங்கத்தின் ஆதரவில் :—

காலை 8-30 மணிக்கு மயிலாப்பூர் வாரன் ரோடில் உள்ள முதன் மந்திரி பக்தவத்சலத்தின் வீட்டு முன்னுல் ஏழைகளுக்கு இலவச உணவு பொட்டல வினியோகம். மாலை 6-மணிக்கு மயிலாப்பூர் எட்வர்டு எலியட்ஸ் ரோடு ராஜேஸ்வரி நிலையத்தில் பக்தவத்சலத்திற்கு தேநீர் விருந்து, டி. ஆர். சீனிவாச அய்யங்கார் தலைமையில் கே. பாலசுப்பிரமணிய அய்யர், கே. ராஜாராம் நாயுடு பேசுவார்கள்.

—'நவமணி,
1-10-63.



## கவலையில்லாத கலைவாணர்

எந்தத் துயரமான கட்டத்திலும் கலைவாணரால் சிரித்துக் கொள்ள முடியும். கடைசி வரையில் அவரிடம் மாபெரும் துணையாக இருந்த சக்தி இது ஒன்றுதான்.

ஒரு முறை சென்னைக்கு வந்த கொண்டிருந்த கம்பெனி வேன் சிறு விபத்துக் குள்ளாகியது. நல்ல வேளையாக உயிர்ச் சேதம் இல்லை. சேதி கேட்டுக் கலைவாணர் காரில் ஓடி வந்தார்.

"நல்லவேளை உயிர்ச் சேதம் இல்லை'' என்று சொல்லிக்கொண்டேகாரிலிருந்து கீழே சிதறிக் கிடந்த பழங்களை எடுத்து சூழ இருந்தவர்களுக்கு எல்லாம் ஒவ்வொன்ருகக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துத் தின்று கொண்டிருந்தார். அப்பொழுது அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்த பஸ் இவரைக் கண்டதும் நின்றுவிட்டது. பிரயாணிகள் எல்லோரும் கீழே இறங்கி வந்து, ஆஹா...என். எஸ். கே. என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே பக்கம் வந்தார்கள். ஒரு பிரயாணி-"என்ன சேதி வேன் இப்படிக் கிடக்கிறதே'' என்று கேட்டார். அதற்கு என். எஸ். கே. "ஒன்னுமில்லே பழம் சாப்பிடனும்னு நினைச்சோம். உடனே காரை இப்படிச் சாய்த்து வச்சிட்டு பழம் சாப்புட்டுக் கொண்டிருக்கோம். விஷயம் இவ்வளவுதான்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்ஞர், ஒரு விபத்துச் செய்திகூட கலைவாணருக்கு நகைச் சுவைதான்.

# காலைவாணர்

## கவிஞர் சுரதா

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்,
கதிர்வாணர்! காலை வாணர்!
நிலையாக மக்கள் நெஞ்சில்
நிலைத்தவர்! பணங்கா சுக்கு
விலைபோக விரும்பிடாத
நகைச்சுவை விருந்து வேந்தர்,
பலபல நன்மை செய்த
படத்துறை பாரி வள்ளல்!

உலகத்தின் புதிய போக்கை
உணர்ந்தவர்; முன்னேற் றத்தைக்
கலைக்கின்ற கருத்தை எல்லாங்
கலைத்தவர்; தம் வாழ் நாளில்,
தலைபோன்ற துன்பம் வந்தே
தழுவிய போதுங் கூட,
கலகல வென நகைத்த
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

கல்வியில் சிறந்த கம்பன்
கவிதையில் புரட்சி செய்தான்;
வில்லினுல் புரட்சி செய்து
விளங்கினுன், வல்வில் ஓரி;
அல்லலைத் தீர்க்க ரஷ்யன்
அரசியல் புரட்சி செய்தான்;
நல்லவர் என். எஸ். கிருஷ்ணன்
நகைச்சுவைப் புரட்சி செய்தார்!

புகைஉண்ட ஓவி யத்தைப்
போன்றிருந் திட்ட நாளில்,
நகைச்சுவை மூல மாக
நாட்டுக்கு நீதி சொன்னுர்.
தொகை தொகையாகப் பெற்றும்
தொகுத்தாரா? அதுதான் இல்லை!
சுகத்தினை பங்கு போட்டார்;
சூழ்ந்தோரை வாழ வைத்தார்!

நல்லதோர் வீணை யாக,
நாட்டிலோர் புள்ளி யாக,
செல்வமே பெற்றி ருந்தும்
தினந்தினம் ஏழை யாக,
மெல்லிய நெஞ்சங் கொண்ட
மேலான கலைஞராக,
எல்லோர்க்கும் நண்பராக
இருந்தவர் என். எஸ். கிருஷ்ணன்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக் கொண்டிருக்கிருர்களே, இந்த 'செக்' புத்தகங்களை அங்கே காண முடியவில்லை. ஒருவரிடமிருந்து இன்னெருவர் பொருள் பெறவேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை. பொருளைச் சேர்த்து வைத்தவர்களுக்கு பிள்ளைகள் இல்லையாயின், அது முழுவதும் அரசாங்கத்துக்கே சொந்தமாகி, அதன் மூலம் மற்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுகிறது.

ஆடம்பரப் பொருட்களின் விலை மிகவும் அதிகம்; அவசியமான பொருட்களின் விலை மிகவும் குறைவு.

பலவிதமான லேபில்கள் உடைய ஒரே சாமானை அங்கு காணவே முடியாது; ரஷ்யாவில் எழுதும் எல்லாப் பேனுக்களும், :ஒரே வித மையினுலேயே எழுதுகின்றன. டாக்சிகள் யாவும் ஒரே தினுசுதான். அரசாங்க சார்பில் உள்ள கார்கள் மாத்திரம் வேறு பாணியில் இருக்கின்றன-அதுவும் அடையாளம் தெரிவதற்காகத்தான் அப்படியிருககும் என்று நினைக்கிறேன். நாங்கள் போயிருக்கும்போது டாக்சிகள்—அரசாங்க கார்—இன்னும் ஏதோ ஒருவிதக்கார்—இந்த மூன்றே மூன்று தினுசுகளைத்தான் கண்டோம்.

பூட்ஸின் விலை மட்டும் அதிகம்; பூட்ஸ்தானே என்று யாரும் அலட்சியமாக நினைத்து விடக் கூடாது என்பதற்காக விலையைக் கூட்டி வைத்திருக்கிருர்களோ என்றுதான் நினைக்கிறேன்!

நாங்கள் பூமிக்குள்வேயே போடப்பட்டிருக்கும் இருப்புப் பாதையில் போய்க்கொண்டிருக்கும் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். எங்களுடன் 'பிர்லாப்' என்ற பட டைரக்டர் ஒருவர் வந்துகொண்டிருந்தார். வெகுதூரம் கழித்தும் எங்களிடம் டிக்கட் பரிசோதனை செய்ய டி. டி. ஆர். வராததைக் கண்ட நான், பிர்லாபிடம் "அதுசரி! ஏன் இன்னும் டி. டி. ஆர். வரவில்லையே-என்ன சங்கதி" என்று கேட்டேன். "இங்கே டிக்கட் எடுக்காமல் யாரும் பிரயாணம் செய்வது கிடையாது" ஆகவே டிக்கட் பரிசோதகரும் கிடையாது. என்று அந்த டைரக்டர் சொன்னுர். எங்களுக்கு அரசாங்கம் தான் தாய் என்று பெருமிதமாகப் பேசினுர். இந்தியத் தாய், தமிழ்த் தயய் என்று இங்கே எத்தனையோ பேர் சொல்லக் கேட்கிருேம். இதிலெல்லாம் இல்லாத இனிமை அந்த டைரக்டர் சொன்ன வாக்கியத்தில் இருந்தது.

ஒரு நல்ல குடும்பத் தலைவனும் தலைவியும் தங்கள் வீட்டை சுத்தமாக வைத்திருப்பதில் எவ்வளவு அக்கறை காட்டுவார்களோ, அந்த அக்கறையை அங்குள்ள மக்கள் தங்களது தாய்ப் பூமியிடம் காட்டுகிருர்கள். மங்கையருக்கு தனி மரியாதை காட்டுகிருர்கள். எங்கள் கோஷ்டியில்கூட, மதுரத்துக்கும் துர்க்கா கோட்டேக்கும்தான் முதல் மதிப்பு, பிறகுதான் எனக்கு—டைரக்டர் சுப்ரமண்யம்—அசோக்குமார்-மற்ற எல்லாருக்கும்! தாயுடன் பிள்ளைகள் பழகுவதைப்போல அருமையாக அன்பாகப் பழகுகிருர்கள். இங்கோ நடப்பதை நினைத்தாலே, ஆபாசமாக இருக்கிறது—பெண்கள் வீதியிலே கௌரவமாக நடமாட முடிவதில்லை. மலஜலம் கழிக்க என்றே தனியாக ஓர் இடம் கட்டிவைக்கப்பட்டிருந்தும், இங்கே சிலர் மட்டரகமாக நடந்துகொள்ளுகிருர்கள்—வீதியில் சிகரெட் பிடித்து அப்படியே போட்டு விடுகிருர்கள்-பலகார பட்சணங்களை வாங்கித் தின்றுவிட்டு, காகிதத்தை அப்படியே வீதியில் விட்டெறிகிருர்கள். சோவியத் ரஷ்யாவிலே, இப்படி ஓர் அசிங்கமான சம்பவத்தை ஒரு சின்ன சந்து முனையில்கூட காணமுடியாது. அவசர வேலையாக போய்க்கொண்டிருப்பவனும், நின்று சிகரெட்டை நன்ருக குடித்து முடித்து அணைத்து அதற்குரிய பெட்டியில் போட்டுவிட்டுத்தான் தன் வேலையைக் கவனிப்பான். வீதியில் மறந்தும் காறி உமிழ மாட்டார்கள். அதற்குரிய தொட்டியில்தான் உமிழ்வார்கள். இதனுல் பார்க்கவும் பழகவும் நன்ருக இருப்பது மட்டுமல்லாமல், நோய்கள் வராமலும் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

சாதாரணமான ஒரு தோட்டிக்கு 600 ரூபிள் சம்பளம் கிடைக்கிறது. ஒரு டாக்சி டிரைவருக்கு 1000 ரூபிள் சம்பளம் கிடைக்கிறது. வாங்கும் பொருளை எல்லாம் அனைவரும் வாழ்க்கைப் பொருளாகவே ஆக்கிக் கொள்ளுகிருர்கள். மகாத்மா காந்தி—வினேபாஜி—போன்ற புனிதர்கள் நம்பிய நேர்மையை, அங்குள்ள ஒரு சாதாரண மனிதனும் கடைப்பிடித்து வருகிருன்.

ஒருநாள், நானும் மதுரமும் காரில் போய்க்கொண்டிருந்தோம். ஒரு வீதியோரத்தில், தினசரி பத்திரிகைகளும், ஒரு கிண்ணமும் கொண்டு வைக்கப்பட்டன. திரும்பி நாங்கள் வரும்போது, அந்த இடத்தைப் பார்த்தோம். பேப்பர்கள் இல்லை. கிண்ணம் நிறைய காசுகள் இருந்தன. மக்கள் எல்லாரும் தங்களுக்குத் தேவைப்பட்ட பேப்பர்களை எடுத்துக்கொண்டு அதற்குரிய நியாயமான விலைப் பணத்தை கிண்ணத்திலே போட்டுச் சென்றிருக்கிருர்கள். எப்படி? இங்கே அப்படி நடைபெறுமா? கிண்ணத்தையும் பேப்பர்களையும் ஒருவனே தூக்கிக்கொண்டு ஓடிவிட மாட்டானு?

மக்களுக்குள் எந்த பேத உணர்ச்சியையும் அங்கே காண முடியவில்லை. பேதம் அங்கும் இருக்கிறது என்பதை நகைச்சுவையாகச் சொல்லவேண்டுமானுல், சைவமும் உண்டு-அசைவமும் உண்டு-சிகரெட் பிடிப்பவர்களும் உண்டு-பிடிக்காதவர்களும் உண்டு-இது போன்றவைகளைத்தான் சொல்லலாம்!

ஏறத்தாழ நம்நாட்டுக் கலாச்சாரங்களையே அங்கே கண்டேன். காபூலில் இடிந்த சிவன் கோவில் ஒன்று இருக்கிறது. இதை நோக்கும்போது, நமது கலாச்சாரம் காபூல் வழியாக என்றே ஒரு காலத்தில் ரஷ்யா சென்றிருக்கலாமோ என்று நினைக்கிறேன். சமஸ்கிருதத்துக்கும் ரஷ்ய மொழிக்கும் சில பல தொடர்புகள் இருக்கின்றன. மலையாளமும் சமஸ்கிருதமும் தொடர்பு பெற்ற மொழிகளல்லவா? எனக்கு மலையாளமும் தெரியும். ஆகவே, ரஷ்ய மொழியை சுலபத்தில் புரிந்துகொண்டு, அதிலேயே கூட்டங்களிலும் ரேடியோவிலும் பேசினேன்; மதுரமும் அப்படியே!


தொழிற்சாலைகளுக்குள் போனுல் என்ன ஆச்சரியம்! ஒரு பக்கம் பஞ்சு மிஷின் வழியாகப் போய்க்கொண்டிருக்கிறது; எல்லா இடமும் நாங்கள் சுற்றிவிட்டு கடைசி இடம் வருவதற்குள் அதே பஞ்சு ஆடையாக வந்துகொண்டிருக்கிறது. பூட்சுத் தொழிற்சாலையிலும் அப்படியே! ஒரு கார் தொழிற்சாலைக்குள் போனேம். சினிமாவில் வருமே (டிரிக்-ஷாட் அதாவது, மந்திர தந்திரக் காட்சிகள்) அவைபோல மந்திர வேகத்தில் கார்கள் தயாராகின்றன. இது உடனே ஓடுமா என்று நான் கேட்டதுதான்

(11-ம் பக்கம் பார்க்க)

# கலைவாணருக்கு அறிவுலகம் சூட்டிய புகழ்மாலை!

கலைவாணர் தனி மனிதர் அல்ல; ஒரு சகாப்தம். தமிழ் நாட்டின் நல்முத்து. மலடி வயிற்றிலே பிறந்த மகன். புதையல் எடுத்த தனம். தென்னகத்திற்குக் கிடைத்த தேன் விருந்து. தமிழகம் தந்தகலைச் செல்வம் கதியற்றுக் கிடந்த தமிழ் மக்களைச் சீர் திருத்துவதற்காகத் தோன்றிய புத்தொளி. ''ஈதல், இசைபட வாழ்தல், அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு'' என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்து வழி காட்டி தன்னால் உதவி பெற்ற மற்றவர்களை யும் அவ்வாறு வாழச் செய்திருக்கிறார் அவர். அவரைப் போன்ற நல்ல உள்ளம் படைத் தவர் நாட்டிலே இருப்பதே அபூர்வம்!

— அறிஞர் அண்ணா.



கலைவாணர் திரு என். எஸ். கிருஷ்ணன் நகைச்சுவையின் மூலமாக மக்களை மகிழ்வித்த தோடு சிறந்த கருத்துக்களையும் பரப்பியவ ராவார்.

—காமராஜர்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியா முழுவதுமே திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு நகைச் சுவைக் கலைத்துறையில் தனிப்பட்ட ஒரு சிறப்புண்டு. நான் அறிந்தவரை, மக்களுக்கு மகிழ்ச்சியும், சிரிப்பும் ஊட்டும் உரிய கலையில் அவருக்கு நிகரானவர் எவருமே இல்லை.

—மத்திய அமைச்சர் கோபால் ரெட்டி.

நாடக—திரைப்படத் துறைகளில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தமக்கென ஒரு தனி இடத்தை சிருஷ் டித்துக்கொண்டிருந்தார். அவர் காலத்தில் அவருக்குப் போட்டியாக இன்னொருவர் இருக்கவில்லை. அவருக்குப் பிறகும் அவருடைய இடம் பூர்த்தி செய்யப்படவில்லை.

நகைச்சுவை வேறு, நையாண்டி வேறு. என். எஸ். கே. நையாண்டி கலைஞர் அல்ல. நகைச்சுவை கலைஞர். நமக்குப் பிடிக்காத ஒரு கருத்தை அவர் நகைச்சுவை யுடன் வெளியிடும்போது அதனை முகம் சுளிக்காமல் ரசிக்க முடிந்தது. அது அவரிடமிருந்த தனித் திறமை. கலைத் துறையைத் தொழிலுக்கு மட்டுமல்லாமல் பொது மக்களுக்குப் பயன்தரும் தொண்டுக்கும் பயன்படுத்தி னார். அதனால்தான் பிற கலைஞர்களிடமிருந்து அவரைப் பிரித்துப் பார்த்து கௌரவிக்க முடிகின்றது. வாழ்க கலைவாணர் புகழ்!

—ம. பொ. சி.

தமிழ் சினிமாத் துறையில் புதிய புதிய கருத்துக்களைப் புகட்டி அக்கலை வளர்வதற் கும் பேருதவி செய்திருக்கிறார் திரு என். எஸ். கிருஷ்ணன். நம்மை குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து, அதே சமயத்தில் நம்மிட மிருக்கும் குறைகளை வலியிறுத்தி அவைகளை சீர்திருத்த அவருடைய கதைகளும் நடிப்பும் உதவி வந்தன. சார்லிசாப்ளின் ஆங்கிலச் சினிமாத் துறையில் செய்த சேவையை திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தமிழ் சினிமா உலகுக்குச் செய்தாரென்றால் அது மிகையாகாது.

—சி. சுப்பிரமணியம்.

எத்தனைபேர் பங்கெடுத்துக் கொண்டா லும் கொள்முதல் குறையாது. திரு. கிருஷ் ணன் காலி செய்த இடத்தில் வேறு யாரும் புகுந்து புகழ் பெற முடியாது.

—ராஜாஜி.

கலைவாணர் தமது வாழ்நாளில் எத்தனை எத்தனையோ கல்வி நிலையங்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் பல லட்சம் ரூபாய்களை வாரி வழங்கியிருக்கிறார். கலை உலகம் கலைவாணரால் எத்தனையோ புதுமைகளைக் கண்டது. நகைச்சுவைக் கலையிலே நல்ல கருத்துக்களைக் கொடுப்பது அவருக் குரிய தனிச் சிறப்பு. நூற்றுக்கு மேற்பட்ட படங்கள் இந்தத் தனி சிறப்புக்கு சான்று கூறி நிற்கின்றன.

—டி. கே. சண்முகம்.

ஏறத்தாழ 30 ஆண்டுகள் கலைவாணர் கலைத்துறை யில் ஆற்றிய அரும்பணியை எந்தத் தமிழ் மகனும் சுல பத்தில் மறந்துவிட இயலாது. இதுவரை ஒரே ஒரு என். எஸ். கிருஷ்ணனைத்தான் கலை உலகம் தந்துள்ளது. அவரது ஒப்புயர்வற்ற கலைப்பணியை, சிந்தனைச் செல் வத்தை இதுவரை தோன்றிய எந்த நடிகரிடத்திலும் தமிழகம் பெற்றதில்லை.

—எம். ஜி. ஆர்.

கலைவாணர் கலைஞராக மட்டும் வாழவில்லை. 'மனி தன்'' என்ற வார்த்தைக்கு எடுத்துக்காட்டாக விளங்கி னார். சிரித்துப் பேசும் சிந்தனையாளராக விளங்கினார். தீர்க்க தரிசனம் மிக்கதோர் தத்துவஞானி.

—எஸ். வி. சகஸ்ரநாமம்.

கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் தம் நடிப்புக் கலையை சமுதாய சீர்த்திருத்த தொண்டுக்கும் பயன்படுத்தி னார். அந்த முயற்சியில் சிறந்த வெற்றியும் பெற்றார். சமயத் துறையில் உள்ள மூட நம்பிக் கைகள் முதலாக, அரசியல் துறையில் உள்ள வீண் பிடி வாதங்கள் வரையில் பல வற்றை வெட்ட வெளிச்ச மாக்கினார். பலரும் உணரும் படி செய்தார். ஆனால் ஒருவர் மனதையும் புண்படுத்தாம லேயே அத்தொண்டைச் செய் தார்.

—டாக்டர் மு. வரதராசனார்.

''தமிழ்க் கலைஞனிலும் ஒருவன் ஒரு கோடியை அடுத்து பொருள் திரட்டி னான். ஆனால் அவன் அத் தனையும் பிறர்க்கு வழங்கி உயிர் துறந்தான்'' என்று ஒரு வரலாறு எழுதப் பெறுமானால் அது திரு. என். எஸ். கிருஷ் ணனுடையதாக இருக்கும்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

## கலைவாணர் கண்டுபிடிப்பு



கலைவாணர் என். எஸ். கேயும் திருமதி மதுரமும் முன்பு சென்னையில் நடைபெற்ற பெண்கள் சேமிப்பு வார விழாவில் கலந்து கொண்டனர்.

கலைவாணர் பேசியபோது எதிரே அமர்ந்திருந்த பெண்களைப் பார்த்து உங்களில் சிலர் ரோஜாப்பூ வைத் திருக்கிறீர்கள். சிலர் மல்லிகைப்பூ அணிந்திருக்கிறீர் கள், சிலர் முல்லைப்பூ மற்றும் சிலர் கனகாம்பரம்பூ, கதம் பப்பூ இப்படிப் பல 'பூ'க்களை அணிந்திருக்கிறீர்கள். இந் தப் பூவெல்லாம் அவசியம்தான். ஆனாலும் இவைகளை யெல்லாம்விட பெண்களுக்கு அவசியமான பூ சிறந்த பூ ஒன்று உண்டு. உங்களுக்குத் தெரியுமா? யாராவது சொல்லுங்கள் பார்க்கலாம் என்று ஒரு கேள்வியை எழுப்பி இடைவெளி விட்டார். யாரும் பதில் சொல்ல வில்லை. கலைவாணர் தொடர்ந்தார். உங்களுக்கு அவசிய மான பூ எது என்று நான் சொல்லட்டுமா? அதுதான் சேமிப்'பூ' எதிர்கால நன்மைக்காக நீங்கள் எல்லாம் முடிந்தவரை 'சேமிப்பூ' வைக்கவேண்டும். அதற்காகத் தானே இந்த விழா என்றவுடன் பெண்களின் ஆர வாரம் அடங்க சிறிது நேரமானது.

நகைச்சுவை அரசர்
நல்ல தமிழ்க் கலைவாணர்
நாடு போற்றிய செம்மல்
கற்கண்டு நிகர் சொல்லாளர்
பொற்குன்றமெனும்
பண்பாளர்
கலைமேதை கருத்துச்சோலை.

—கலைஞர் கருணாநிதி.

நகைச்சுவை மன்னன்
அல்லன்!
நற்கலைவாணன் அல்லன்!
வகைப்படு திறங்கள் காட்டும்
மதியினன் அல்லன்! நேரும்
பகைப்புலத்தன்பைச் சிந்தும்
பண்பினால் என். எஸ்.
கிருஷ்ணன்
மகவுளம், மானமிக்க
மனிதரில் இறைவன்!
ஆமாம்!

—கவிஞர் கண்ணதாசன்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரசிக்கிறீர்கள், அதில் ஓர் இழவும் புரியவில்லையே என்று ஒருமுறை ஒப்பற்ற மேதை உடுமலை நாராயண கவி அவர்கள் கேட்டார்கள். அதற்குக் கலைவாணர் என்ன சொன்னர் தெரியுமா? "ஓய்! உம்ம பையன் சின்னக் குழந்தையாக இருக்கிறபோது, இரண்டு மூன்று வயசிலே பேசினனே மழலைஅதுக்குஉம்மாலே அர்த்தம் சொல்ல முடியுமா? நீர் ரசிச்சீரில்லே; அவனுடை அம்மா ரசிச்சாங்கள்ளே; அதே போலதான் இப்ப நான் ரசிக்கிறேன்" என்றுதான் சொன்னர்!

ஒரு துறையில் வளராதவர்களுக்கு - அந்த அப்பாவிகளுக்கு - வளர்ந்துவிட்டவர்கள் தான்அம்மாவும்அப்பாவும் காட்டும் பேரன்பைக் காட்டவேண்டும் என்பதே கலைவாணர் சித்தாந்தம்!

ஒருமுறை கலைவாணர் தமது வீட்டில், திருமணம் நடத்திக் கொள்ள ஓர் அன்பருக்கு இடவசதி செய்து கொடுத்திருந்தார். அது வெறும் நூறு ரூபாய்க்குள் முடிந்து கொண்டிருந்த திருமணம். தாலிகட்டும் நேரம் மேளகாரர் தமது குழுவினரோடு ஐந்து ரூபாய் சம்பளம் வாங்கப் போகும் பூரிப்பில்,பூபாளத்தை நினைத்துக்கொண்டு, பூரிகல்யாணிக்காக விரல் அசைக்க, குழாய் வழியாக முகாரியே வெளிவந்துகொண்டிருந்தது! கெட்டிமேளம்! கெட்டி மேளம் என்று கூட்டம் எனக் கருதப்பட்ட கலைவாணர் குழுவில் உள்ள இருபது இருபத்தைந்து பேர்கள் தாலி கட்டும் நேரத்தில் கையசைக்க-ஏன் இப்படிக் கையசைக்கிறார்கள் என்பது புரியாத நாதஸ்வர வித்துவான் ஊதுவதையே நிறுத்தி, குழலை எடுத்து என்ன சங்கதிங்க- எல்லாரும் கையை உசத்துகிறீர்களே என்று கேட்டுவிட்டார் பாவம், புரியவில்லை அவருக்கு! எல்லாரும் கேலிபண்ணிவிட்டார்கள். மாப்பிள்ளை எப்படியோ சமாளித்து தாலிகட்டிவிட்டார்! சரி வாசியப்பா என்றார்கள். வித்துவான், தமக்குத் தெரிந்ததையெல்லாம் வாசித்துக்காட்டினர் என்பதைவிட, வாசித்துக் கொட்டினர் என்றே சொல்லவேண்டும். குழுவில் உள்ளவர்கள் வித்துவானைகேலி செய்து ரசித்தார்கள். தன்னைக் கேலி செய்வது புரியாமல் பாவம் அந்த வித்துவானும் நாதஸ்வரத்தில் தானும் வாசிப்பதாக நினைத்துக்கொண்டு, அதில் உள்ளே ஒட்டியிருக்கும் தூசியைத்தான் ஊதி ஊதிக் 'க்ளீன்' செய்துகொண்டிருந்தார்.

இதை மாடியிலிருந்துசூட்டிங்குக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த கலைவாணர், சன்னல் வழியாகப் பார்த்துவிட்டுவிரைவாகக் கீழே இறங்கிவந்தார்.



கலைவாணர். உடுமலை நாராயணகவி, அறிஞர் அண்ணா.

நாதஸ்வர வித்துவான் குழலை எடுக்கவில்லை கலைவாணர் வித்துவான் முன்னல் உட்கார்ந்து பிரமாதமாக ரசித்தார். அவரே ரசிக்க ஆரம்பித்ததும் குழுவினர்கள் பயந்து தாங்களும் ரசிக்க ஆரம்பித்துவிட்டனர். யாரும் கேலி பேசவில்லை. இப்படியே இரண்டு மூன்று பாட்டுகள் வாசித்ததும் அந்தவித்துவானை கலைவாணர் இங்கே வாரும் என்று மாடிக்குக் கூட்டிச் சென்று, உட்காரச் சொன்னர். வித்துவானுக்கு ஒரே மகிழ்ச்சிஉட்கார்ந்தார். கலைவாணர்-ராசரத்தினம் காருகுறிச்சி ஆகியோர் வாசிப்பைத்தான் ரசித்ததாகக் கேள்விப்பட்டோம், இன்று நாமும் அந்தப் பட்டியலில் சேர்ந்துவிட்டோமே என்று பூரித்துப் போய் இருந்தார். உள்ளேயிருந்து, கலைவாணர் நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டுவந்து இந்தாரும் வச்சுக்கும் என்று அவரிடம் கொடுத்தார். வித்துவான் பயபக்தியுடன் வாங்கிக்கொண்டார்.நம்ம வாசிப்பு எப்படின்னு ஐயா ஒரு வார்த்தை சொன்ன? என்று வித்துவான், மதிப்புரைகளுக்குக்கெஞ்சினர். "ரொம்ப நல்லாருந்தது. ஆனல் ஒரு சிறு குறைதான் என்று மெதுவாக இழுத்தார். என்னங்க என்றார் வித்துவான். ராசரத்தினம், காருகுறிச்சி இவர்கள் எல்லாம் குழலை எடுத்திட்டா தங்களை அவர்கள் மறந்திடுவாங்க இன்னும் நல்லா வாசித்துவிடுறாங்க பாவம், உமக்குக் குடும்பக் கவலை அதிகம் போலருக்கு நீர். வாசிக்கிறபோது வீட்டிலே அரிசியில்லையேபிள்ளை சாப்பிட்டுச்சோ இல்லையோ மனைவிக்கு உடம்பு சரியில்லியே மருந்து வாங்கப் பணமில்லையே, அடகு வைக்க நகையில்லையே இங்கே அஞ்சு ரூபாய்தானே பேசி வந்திருக்கோம் என்ற தினுசில் உம்ம சுயசரிதையைத்தான் நீர் குழல் மூலமாக குரலைக் கூட்டிக் குறைச்சு சொல்றச் மாதிரி இருக்கிறதே தவிர, பாட்டு மாதிரி இல்லை; நீர் வாசிச்சதிலேயிருந்து சங்கீதம் வரலை; உம்ம சரித்திரம்தான் வெளியே வந்துகிட்டிருந்தது. இந்தா பாரும்; கலைக்கு முதல் விரோதி கவலைதான்" தொழில் பண்றபோது, கவலையை விட்டுடணும்; அதோட நீர் அடிக்கடி காருகுறிச்சி கச்சேரியும் கேட்டுக்கணும் என்றும் அறிவுரை கூறினர். புண்ணியவான் புத்தி சொன்னீங்க என்று காலில் விழுந்து வித்துவான் வணங்கிச் சென்றார். இன்று அதே இளம் வித்துவான் சென்னையில், கலைவாணர் தந்த நூறு ரூபாய்நோட்டுபோல், இரண்டு மூன்றுநோட்டுக்கள் ஒரேகச்சேரிக்கு வாங்கும் அளவுக்குத் தொழிலில் வளர்ந்து விட்டதையும் நான் காண்கிறேன்.

கலைவாணரைப் பின்பற்றுகிறோம் என்று சொல்ல விரும்பும் யாரும் அள்ளிக்கொடுக்கக் கூட வேண்டாம்; அண்ணனின் இந்த ஒரு குணத்தைப் பின்பற்றினல் போதும்! முளைத்து வரும் சிறு செடிகள் கிள்ளப்பட்டு வரும் ஒரு நந்தவனம் வருங்காலத்தில் நந்தவனமாகக் காட்சியளிக்க முடியாது. வெறும் வனமாக,சுடுகாடாகத் தான் காட்சியளிக்க முடியும். வேண்டாம், நமது தமிழ்க் கலையுலகத்திற்கு அந்த விபரீத நிலைமை!

இப்போது இன்னுமொன்றைக் கூற விரும்புகிறேன், நானறிந்தவரையில். இளங் கலைஞர்களிடம் கலைவாணரின் இந்தக் கொள்கையைப் பின்பற்றி, அவர்களுக்கு உற்சாகம் தந்து, முடிந்த வரை உதவும் பெருங்குணத்தை, நமது இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்.அவர்களிடம் இன்று காண்கிறேன், அவர் நடித்து வரும் படங்களிலும்; அவர் உலாவும் வேறு நிறுவனங்களிலும்; அவரால் மதிப்பை, வேலையை இழந்துவிட்ட எந்த இளங் கலைஞனையும் பார்க்கமுடியாது; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

"எனக்குப் பகைவர்களே கிடையாது.என்ற உட்பொருள் வசனத்தை, நமது கலைஞர் கருணாநிதி 'கலைவாணருக்கு மணமகளில் எழுதிக்கொடுத்தார்; ஆம், கலைவாணருக்கு பகைவர்கள் கிடையாதுதான்! அறிஞர் அண்ணா அவர்கள்கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று ஆயிரத்து முன்னூற்று முப்பதோடு இணைத்துக் கொள்ளும் வண்ணம் முப்பத்து ஒன்ருவது குறள் ஒன்றையும் கூறினர்.

இந்தஇரண்டையும்அடிக்கடி நினைத்துப் பார்த்துக்கொள்வேன். அப்போதெல்லாம்; கலைவாணர் பட்டபாட்டுக்கும் பண்ணிய புண்ணியத்திற்கும் தக்க வெகுமதி கிடைத்துவிட்டது என்றே என் மனம் ஆறுதல் கொள்ளும்!

வாழ்க கலைவாணர் புகழ்!



## நகைச்சுவை அரசே!

கலைவாணரைப் பார்க்க வந்த ஒருவர் "அண்ணனுக்கு இப்ப என்ன வயது ஆச்சு" என்று கேட்டார். உடனே இவர் "எனக்கா நாற்பது வயதாகி ஏழு வருசமாச்சு. ஆனல் நாற்பது போதும் அதிக ஆசை எதற்கு என்று அதோடு ஸ்டாப் பண்ணிக்கொண்டேன்" என்றார். கேட்டவருக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. உடனே மறுபடியும் கலைவாணர் சிரித்துக்கொண்டே "நாற்பத்தேழு வயது என்றால் கிழவன் மாதிரித் தெரியுது பாருங்க அதனலேதான் அப்படிச் சொன்னேன்" என்று கூறினர் வந்திருந்தவர் விழுந்து விழுந்து சிரித்தார். கடைசிக்காலத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் அவருக்கு ஊசிமேல் ஊசி போட்டார்கள். உடனே டாக்டர்களை நோக்கி சிரித்துக்கொண்டே "என் உடலில் செருப்புத் தைக்கிறீர்களா?" என்று கேட்டார். டாக்டர்களுக்கே சிரிப்புத் தாங்க முடியவில்லை.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தாமதம். ஒரு அன்பர் அதே காரிலேயே கொஞ்ச தூரம் எங்களைக் கூட்டிச் சென்றார். ஒரு தொழிற்சாலையின் ஆரம்ப இடத்தில் கரும்புகளைப் பார்த்தோம். கடைசி இடத்தில் அவைகளைத் தின்னும் 'சாக்லெட் பப்பர்மின்ட்' ரூபத்தில் கண்டோம்.

வேப்ப மரம்-புளிய மரம்-தேங்காய் - மாங்காய் - இவைகளைத் தவிர நம்நாட்டில் உள்ள யாவுமே அங்கு உண்டு என்று சொல்லலாம்.

'லெனின் கிராடி'லிருந்து 60-வது மைலில் ஓரிடம் போய் பார்த்தோம்; அங்கே இமயகிரிக்கு மேலே, சந்திரனையும் சூரியனையும் ஒரே இடத்தில் கண்டோம்!' ஜார் மன்னன் வாழ்ந்த சுயநல வாழ்வுக்கான சாட்சியங்களைக் கண்டோம்; அவனது பிடியிலிருந்த இந்த பூமி, இன்று எப்படி இணையற்று விளங்குகிறது என்பதை எண்ணும்போது, எந்தக் கைகளும் லெனினையும் மற்ற பெரியவர்களையும் தன்னையறியாமல் ஒரு முறையாவது நினைத்து வணங்கிவிடும்.

இன்னும் அங்கே கண்ட காட்சிகள் அளவற்றவை-மறக்க முடியாதவை!

எவருமே தங்களது பிற்கால வாழ்வுக்கென்று சேர்த்து வைக்க வேண்டுமே என்பதற்காக ஓடி ஆடித் திரிவதைக் காணோம். திறமைக்கு உயர்வு தானாகக் கிடைக்கிறது. அதிகக் குழந்தைகள் பெற்ற தாய்க்கு, அரசாங்கம் தக்க பரிசுகளைக் கொடுத்து கௌரவிக்கிறது. நம்நாட்டில் போகிற போக்கைப் பார்த்தால், மலடுகளுக்குப் பரிசுகள் தருவார்கள் போலிருக்கிறது! கோவில்களில் இங்கே காணப்படும் கூட்டங்களைப் போல காணோம்; இருந்தபோதிலும் மக்கள் என்றும் இன்பமாகவே எந்தக் குறையுமின்றி வாழ்கிறார்கள். பிள்ளைகளை வீட்டிலும் வளர்க்கிறார்கள்; 'கான்வென்ட்'டிலும் வளர்க்கிறார்கள். பெண்கள் நகைகளையே விரும்புவதில்லை. வேளையெல்லாம் புன்னகையே அவர்கள் முகத்தில் பொலிவுடன் விளங்குகிறது. பெண்கள் பெண்களாகவும், ஆண்கள் ஆண்களாகவும் கவலையின்றி, நெறியோடு-முறையோடு - நேர்மையோடு கவலையில்லாமல் அங்கு வாழ்கிறார்கள்.

பிற்காலத்தில் வீட்டில் சோம்பேறியாக இருந்து, சுகமாக வாழவேண்டுமே என்பதற்காகத்தான் தற்காலத்தில் அநேகர் நம்நாட்டில் ஒன்றாகப் பாடுபடுகிறார்கள், அங்கே இத்தகைய போலி உழைப்பைக் காணவே முடியாது; எங்கும் உண்மை-எதிலும் உயர்வு!

சுமார் 4, 5 நாட்கள் தங்கினோம், இது அயல்நாடு என்ற எண்ணமே வரவில்லை. தாய் நாட்டில் வாழ்வதுபோன்ற இனிமையே எங்களிடம் குடிகொண்டிருந்தது. அப்படி அருமையாகப் பழகினார்கள்.

நண்பர்களோடும் மதுரத்தோடும் அங்கிருந்து புறப்படும்போது, விமான நிலையத்தில் காலை வைத்ததும் விமானத்தில் ஏறவே மனம் வரவில்லை. ரஷ்ய மக்களுடன் ஆசையோடுபேசிக் கொண்டிருந்தேன். புறப்பட வேண்டிய நேரம் ஆகிவிட்டதே என்று நண்பர்கள் என்னை அழைத்தபோதுதான் ரஷ்ய பூமியை மீண்டும் ஒரு முறை சூழவும் அன்போடு-ஆசையோடு பார்த்தவாறே படிகளில் காலடி எடுத்து வைத்து ஏறினேன். இனி என்று காணப் போகிறேன், அந்த நிஜமான சொர்க்க பூமியை?

என் வாழ்வில் நான் எத்தனையோ இனிய நாட்களை சந்தித்திருக்கிறேன். என்றாலும், சோவியத் திருமண்ணில் உலவிய அந்த நாட்களைப்போல எந்த நாட்களையுமே கூறமுடியவில்லை!

அதற்குக் காரணம் என்ன?
நீங்கள் சிந்தியுங்கள்!
நானும் சிந்திக்கிறேன்.

அடுத்த இதழில்-

**தமிழ்ப்பித்தன்**

எழுதும்

தென்றல் நடைக்கவிதை

தித்திக்கும் தேன் தமிழ்க்காவியம்

## "சோகக் கதை"

இடம் பெறுகிறது.

# வள்ளலே! உள்ளபடி வாழ்த்துகிறேன்!

கோ. இறைமுடிமணி

கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓடும் கதிரவன்-மனிதனின் வாழ்க்கையில் ஒரு நாளை எடுத்துக்கொண்டு ஓடுகிறான்' என்ற உண்மை எனக்குத் தெரியாது!

ஐம்பது வயதுதானே கலைவாணனுக்கு ஆகிறது. இன்னமும் ஐம்பது வயதாவது வாழ மாட்டாரா? அப்படித்தான் இறந்துவிட சில அடையாளம் என்ன? 'நரை எங்கே? மூப்பெங்கே?' என்று பல் விழுந்ததா? பார்வை மங்கியதா? கால் தடுமாற்றமா?' என்று கூட்டிக் கிடந்தேன்.

மூடனே! நன்றாக முற்றினால்தான் மாங்கனி-கீழே உதிரும்! மனிதன் விழ காலமில்லை! உன் கணக்கு சரியில்லை என்று காலன் உணர்த்தினான்.

காலனுக்கு அந்தகன் என்று ஓர் பெயர் உண்டு. அதனால்தான் அந்தக் குருடன், கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாய், நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில் நின்ற நடுவாய்-வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்-மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய்—சந்தன மரமாய் நின்ற கலைவாணனை வெட்டிச் சாய்த்து, யார்க்கும் பயன் படாத சப்பாத்திச் செடியாகிய என்னை வாழ வைத்திருக்கிறான்?

ஏழாண்டுகள் கலைவாணனோடு பழகி இருந்தேன். எப்பொழுதும் சிரிப்பான். 'சிரிப்பவர் அழுவார்' என்று சொல்வார்கள். சிரித்தவன் அழவே இல்லை! ஏழை, எளியவர் எல்லோரையும் அழவைத்து விட்டு சிரித்தபடியே சிதையில் போய் படுத்துக் கொண்டான். "வாழ்வுக்கு வழியில்லை" என்று தன் வாயிற்படி வந்து நின்றோரை ஆழ்ந்த அன்பினால் அணைத்த இந்தக் கைகளும் வெந்ததே! கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போகஎன்ற வாயும்வேகுதே!... வெந்து பொடிசாம்பல் ஆகுதே!... போகுதே! ...அன்பெனும் பிடிக்குள் அகப்பட்ட மலை-படுத்து விட்டது! அன்பு என்னும் குடிசை புகுந்த அரசு சாய்ந்து விட்டது! அன்பு என்னும் கைக்குள் அடங்கிய கடல் வற்றி விட்டது! தலைவா! கலைவாணா! ஒருவனால் கோடி மக்கள் உயர்ந்தனர்—சிரித்தனர் என்றால் அந்த ஒருவன் நீயே! தீது நினைத்த பாவிகட்கும் செய்தாய் கருணை என்றால் அந்த நல்லவன் நீயே! உன்னை நினைக்கிறான் **தென்னகத் தலைவன்!**

நினைப்பவன் -நன்றியுள்ளவன்-நன்றியுள்ளவன்-மனிதன்! வனக் குரங்குகளிடை - ஆட்டமிடும் மனக்குரங்கை நிலை நிறுத்திய-குணக்குன்றே! உனை நினைக்கின்றோம்!! ஏன் தெரியுமா? உனக்கு அது மிகப் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். அன்றொரு நாள்...... 1954ம் ஆண்டு! 6, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை 17. கலைவாணர் வீடு-மேல்மாடி-கலைவாணரும், மதுரம் அம்மையாரும் காரில் சுமார் 1000 மைல்கள் சென்றுவிட்டு அன்று திரும்பினர். கலைவாணர் உடனே தேதியைப் பார்த்து மதுரம்! இன்று மதுரையில் திராவிட முன்னேற்றக் கழகத்து மாநாடு நடக்கிறது, நான் போய் கலந்து கொள்ள வேண்டும் புறப்படுகிறேன்!" என்றார். மனம் சலித்துக் கொண்டு மதுரம் அம்மையார் சொன்னார்கள்,

"என்னமோ கட்சி கட்சி என்று காரையும் உடம்பையும் பாழாக்கிங்கிறிங்க! எக்கேடாச்சும் கெட்டுப் போங்க!" என்றார்கள்.

"மதுரம்! நான் காங்கிரஸ் கட்சிக்கும் உழைத்தேன்-கம்யூனிஸ்டு நண்பர்களுக்கும் உதவி செய்தேன். எல்லாக் கட்சியுடனும் பழகினேன். பாடு பட்டேன். ஆனால் நான் செத்த பிறகு "ஐயோ என். எஸ். கிருஷ்ணன் போய் விட்டான்" என்று தெருத் தெருவாக ஒப்பாரி வைக்கப் போகிற ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் தான்! அந்தக் கட்சிக்காரன் தானா, இல்லையா என்று பார்" என்றார்.

நாம்...கலைவாணரை நினைப்பதினாலே...நாம் உயர்கிறோம். படிக்கப் படிக்க சுவைச் தரும் நூல் போல்; கடிக்கக் கடிக்கச் சாறு தரும் கரும்பு போல்; நினைக்க இனிக்கும் என் நெஞ்சத் தலைவன் கலைவாணன்!

அவரைப் பலர் நினைப்பதாக-நெஞ்சத்தில் சிலையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அது 'உதடோ' உள்ளமோ, ஆனால் அண்ணலே! வள்ளலே! உன்னை நான் உள்ளபடி வாழ்த்துகிறேன்.

நீ வாழ்க!! நின் திரு நாமம் வாழ்க! நீ துவைக்கி வைத்த நகைச் சுவைக் கலை நின்று நிலைத்து வாழ்க! புகழ் மைந்தா! புவியுள்ளவரை உன் புன்சிரிப்பு வாழ்க!!

Regd No : M 7640 தலைவன் விலை 20 காசு

# வெண்பாப் போட்டி

## அண்ணா வழியே வழி.

✻ பரிசு பெற்ற வெண்பா

இந்தி ஒழிய, இனிமைத் தமிழ் வாழ,
அந்நாள்போல் சொந்த அரசமைய—இந்நாளில்
கண்ணும் திராவிடத்தைக் கண்டு பகைநீக்க,
அண்ணா வழியே வழி!!

அ. வனவளவன், கடலூர்.

∴ ∴ ∴

வங்கக் கவிதாகூர் வாழ்த்திய நன்னாடாம்
தங்கக் கனிதருநல் தென்னாடாம்—மங்கையே!
பெண்ணாறும் பல்லாறும் பாயும்பொன் னாடுடைய
அண்ணா வழியே வழி!

நெல்லை வசந்தன், பம்பாய்.

∴ ∴ ∴

தெள்ளுதமிழ் துள்ளுவழி! செய்ய இலக்கியங்கள்
அள்ளிவரு நல்லவழி! அண்ணாவாய்—விள்ளுவழி!
மண்ணடிமை நீக்குவழி! மாற்றுவழி ஏதுவழி?
அண்ணா வழியே வழி

கு. மதிமாறன், சென்னை.

∴ ∴ ∴

இன்பத் தமிழழித்து இந்திதான் இங்கென்றால்
இந்நாட்டில் நாம்வாழ்ந்து என்னபயன்?–தென்னாட்டீர்!
எண்ணி எழுந்திடுவீர் இந்நிலையை மாற்றவெனில்
அண்ணா வழியே வழி.

—கொன்றைச் செழியன், மதுரை.

∴ ∴ ∴

இந்திதனை ஓட்டிடுவோம் இன்னுயிரைத் தந்தேனும்
செந்தமிழைக் காத்திடுவோம் மக்காள்—வந்திடுவீர்
கண்ணான தாயகத்தைக் காத்திடவே வேண்டுமெனில்
அண்ணா வழியே வழி!

—சோ. ரா. எழிலன், கோவை-4.

∴ ∴ ∴

யார்எதிர்த்து நின்றிடினும் ஏளனங்கள் கொட்டிடினும்
பார்புகழும் செந்தமிழர் அஞ்சாராம்—பேர்பெருகும்
தன்னாட்சி தென்னாட்டில் தக்கபடி தோற்றுதற்கு
அண்ணா வழியே வழி.

—கோபு, கோவை.

∴ ∴ ∴

நாட்டு நலமே நலமென்று நாடோறும்
வேட்டு பணியே செய்திடுவோம்—கேட்டிடுவீர்
உண்ணாடி கண்டுவந்த ஒப்பிலா நந்தலைவன்
அண்ணா வழியே வழி.

—தெ. நாராயணசாமி, வளயமாதேவி.

∴ ∴ ∴

ஈன்று புறம்தந்து இன்தமிழைக் கற்பித்து
ஆன்றோர் வழிநடத்தி ஆர்வமுடன்—சான்றோனாய்க்
கண்டிடவே எண்ணும் கனித்தமிழ் நாட்டோர்க்கு
அண்ணா வழியே வழி.

—அ. இராமசாமி, பி. ஏ., பி. டி., கோவை.

∴ ∴ ∴

பாராண்ட நந்தமிழைப் பையவே கொல்லுதற்குக்
கூராகச் சட்டமொன்று கொண்டுவந்தார்—சீராகக்
கண்ணொத்த நம்மொழியைக் காத்திடவே நல்லறிஞர்
அண்ணா வழியே வழி.

—கா. முனியாண்டி, அம்பத்தூர்.

∴ ∴ ∴

அண்ணன் திறந்திட்டான் பாசறை ஒன்றுபார்
மண்ணில் பலிகொடுக்கும் தம்பியர்க்கு—உண்மையில்
மண்டியிடோம் இந்திக்கு மாள்வதுவோ வாழ்வதுவோ
அண்ணா வழியே வழி.

—இராசகோபால், ஆறுமுகநேரி.

∴ ∴ ∴

பெற்ற உயிரைப் பெரும்பேராய்ப் பேணாது
உற்ற திராவிடம் ஓம்பியே—குற்றமில்லா
எண்ணிலாத் தோழருடன் ஏறு நடைகொள்வோம்
அண்ணா வழியே வழி.

—செ. பெரியசாமி சின்னமனூர்,

நாடு விடுபட நற்றமிழ் பீடுபெற
கேடு தரும்கொள்கை கெட்டழியப்—பாடுபடும்
ஒண்டமிழ் அண்ணன் ஒரு தனிப் பேரறிஞன்
அண்ணா வழியே வழி.

—கோபி, காந்திபுரம்.

∴ ∴ ∴

பகுத்தறிவில் இங்கர்சால், பண்பினிலே தேவர்
அகிம்சையில் காந்தி அடிகள்—தொகுத்துமே
கண்ணார நாம் இன்று காண்கின்ற தென்னகத்தின்
அண்ணா வழியே வழி.

—மணிவண்ணன், விழுப்புரம்.

∴ ∴ ∴

கன்னலெனும் சொல்லால் கலையுலகை ஈர்த்திட்ட
தென்னகத்து மன்னன் செழுந்தமிழர்தம்—நந்நண்பன்
மண்ணுலகம் போற்றிவரும் மாண்புமிகு பேரறிஞன்
அண்ணா வழியே வழி.

—குருசாமி, பெரம்பூர்.

∴ ∴ ∴

பூச்சூடி வந்து நிற்கும் பொற்பிழந்த "இந்தி"யினை
சீச்சீ எனத்துப்பிச் சீரழிக்க—இச்சணமே
கண்ணான செந்தமிழர் காரியங்கள் செய்வதற்கு
அண்ணா வழியே வழி.

—செ. வீரமணி, சின்னமனூர்.

∴ ∴ ∴

விட்டாலும் ஏலத்தில் ஏற்காத "இந்தியை"
கட்டாணி முத்தோடு காண்பதுவோ?—சுட்டாலும்
கண்ணான இன்பக் கனித் தமிழைக் காத்துவர
அண்ணா வழியே வழி.

—செ. அமரசிங், சின்னமனூர்.

∴ ∴ ∴

பெற்றதிரு நாட்டிற்கும் பேணுகின்ற நற்றமிழ்க்கும்
உற்றதொரு தீங்கென்றால் காப்பதற்கு—நற்றமிழர்
தென்னகத்து மானிடர்கள் பொன்னெனவே போற்றி-
அண்ணா வழியே வழி! [வரும்

—மல்லி, கோவை.

∴ ∴ ∴

கண்ஒளியாய் நிற்கும் குருடனுக்கு; ஊமைக்கோ
உண்மைசொல் வாயாய் உறவாடும்-எண்ணிலா
வண்டமிழர் வாழ்வதனை மேன்மையுறச் செய்யும்
அண்ணா வழியே வழி.

—ச. இரா. இங்கர்சால், மதுரை.

∴ ∴ ∴

திட்டுவோர் பன்மடங்கு தீவிர மாயிருந்தும்
கட்டுக்கோப் பான கழகத்தின்-திட்டத்தை
கண்ணிரண் டாவெண்ணிக் காத்து வருகின்ற
அண்ணா வழியே வழி.

—சேரை இரத்தினகுமார், பம்பாய்.

∴ ∴ ∴

பண்ணாலும் நற்றமிழர் பண்பாலும் வாழ்ந்துவரும்
எந்நாளும் ஏற்றமுடை எந்தமிழே—நின்னையிங்கு
தென்னாட்டில் நாள்தோறும் சீராகப் போற்றிவரும்
அண்ணா வழியே வழி.

—இரா. மாரிமணாளன், கோவில்பட்டி.

∴ ∴ ∴

இன்னலுறு தென்னகத்தை ஏற்றமுடன் காப்பதற்கும்
முன்னவர்கள் கண்டபுகழ் மீட்டுதற்கும்-தென்றலைபோல்
மண்ணகத்து மாமணியாய் தென்னகத்தில் வந்துதித்த
அண்ணா வழியே வழி.

—கருமலைக்காவலன், கிருட்டிணகிரி.

## வெண்பாப் போட்டி

ஈற்றடி : 2

**வாழ்நாள் இனி வேண்டாம் வா!**

நேரிசை வெண்பாவாக எழுதி அனுப்புக

ஆசிரியர் வெளியிடுபவர் : ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிபேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர் : எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17,